1053

கர ஹூ } ஸ்ரீ: { ஸம்புடம் 10
வைகாசிமீ } { ஸஞ்சிகை 5

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும்
ப்ரசுரமாகும்

[ஸ்ரீ அஹோபில மடத்துப்பத்ரிகை]

நல்லைநெஞ்சே நாம்தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர்புல்கநின்ற வாயிரந்தோளனிடம் *
நெல்லிமல்கிக்கல்லுடைப்பப் புல்லிலையார்த்து * அதர்வாய்
சில்லிசில்லென்றொல்லறாத சிங்கவேழ்குன்றமே.

ப்ரசுரிக்குமிடம்
நெ. 2. ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், சென்னை—7.

வர்ஷச் சந்தா ரூபா 3—0—0 } தனிப்பிரதி விலை 0-4-0 { MAY 1951 VOL. 10. NO 5

விஷய ஸூசிகை

	விஷயம்		பக்கம்
1.	ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்	...	128
2.	ஸதுபதேசம்	...	131
3.	ப்ரஹ்லாத சரித்ரம்	...	137
4.	புயலும் பொறுமையும்	...	142
5.	ஸதாசாரம்	...	144
6.	காஞ்சி கருடோத்ஸவம்	...	149
7.	செய்திகள்	...	151
8.	ஆஸ்திக்யம்	...	153
9.	ஸம்பாதகரின் குறிப்புகள்	...	156
10.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	...	158

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } கர ௵ வைகாசி ௴ { ஸஞ்சிகை 5

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

(10-வது அங்கம்)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

(விஷ்ணுபக்தியெனும் பெண் ப்ரவேசிக்கிறாள்)

விஷ்ணுபக்தி— (தன் காதலுக்கு விஷயமான புருஷவிசேஷனுடைய ப்ரபாவத்தால் தனக்கு அநுக்ரஹிக்கப்படும் ப்ரபாவத்தை நினைத்துக்கொண்டு அதைப்பாடுகிறாள்.)

'யத்பக்தி' என்ற பதங்களோடு இந்நாடகம் தொடங்கிற்று. 'யத்' என்பது பகவானுக்கும் பெயரான ஸர்வநாமசப்தமாகும். 'க: கிம் யத் தத் பதமநுத்தமம்' என்ற விஷ்ணுஸஹஸ்ரநாம ச்லோகத்தில் 'யத்' 'தத்' 'யவன்' 'அவன்' என்ற பதங்களும் விஷ்ணு நாமங்களென்று படிக்கப்பட்டது. கீதையில், 'ஓம் தத்ஸத் இதி நிர்தேச:' என்ற ச்லோகத்தில் 'தத்' என்றும் ப்ரஹ்மத்திற்குத் திருநாமம் என்று கூறப்பட்டது. கீதாபாஷ்யமும் தாத்பர்யசந்த்ரிகையும் அங்கே இந்த ஸஹஸ்ரநாம ச்லோகத்தை உதாஹரித்து, 'க: கிம், யத்' முதலிய பதங்களும் 'தத்' என்பதைப்போல் விஷ்ணுநாமங்களென்று ஸாதித்தன. விஷ்ணுபக்தியைப் பிறப்பித்து அவளை வளர்த்து அவளாலும், அவளால் ஸந்தோஷிக்கும் பகவானுடைய தயையாலும் ஏற்படும் ஜீவமோக்ஷண ஸங்கல்பஸூர்யனாலும், ஜீவாத்மாவுக்கு மோக்ஷம் ஸித்திப்பதை வர்ணிப்பது இந்த மோக்ஷஸூர்யோதய நாடகம். விஷ்ணுபக்தி ஜீவனுடைய விசுத்தமான புத்தியெனும் உப்பரிகையில் ஏறுகிறாளென்று முன் அங்கத்தின் முடிவில் விவேகராஜரால் கூறப்பட்டது. இதுவரையிலும் பக்தி பிறப்பதற்கு இருந்த விக்நங்களோடு போர்புரிந்து அந்த விக்நங்களைப்போக்கி யமம், நியமம், வைராக்யம், ஆசார்யக்ருபை, தத்வஜ்ஞாநம் முதலிய ஸாதநங்களால் பகவத்க்ருபாஸஹாயத்தைக்கொண்டு விஷ்ணுபக்தி பிறப்பதற்குப் பூர்வபீடிகைகள் போடப்பட்டன. விஷ்ணுபக்தி எனும் பெண் இப்பொழுது பிறந்து உடனே பகவானுடைய ஆலம்பநத்தால் தனக்குக் கிடைத்த ஆச்சர்யமான பலத்தையும், ப்ரபாவத்தையும் வர்ணிக்கிறாள். இந்த அங்கம் 'விஷ்ணுபக்தியோடு தொடங்கி 'புருஷன் பரமபதம் நுழைகிறான். இன்னும் உமக்குஎன்ன ப்ரியத்தைத்தரவேணும்?' என்று அவள் விவேகராஜாவைக்கேட்டு அவருடைய பரதவாக்யமங்களத்தோடு முடிகிறது. பக்தி என்பது உயர்ந்தவரிடத்தில் ப்ரியம், ஸ்நேஹம், ராகம், காதல். ஸூத்ரகாரர் உபாஸநமெனும் பக்திக்கு விஷயத்தை 'ஆலம்பந' மென்று மிக ரஸமாகக்குறித்தார். 'ஸம்பூதி காம்யத்வ நாலம்பநதீதி பாதராயண:'. ச்ருங்காரமென்னும் காதல் ரஸவிஷயமான காந்தனை (நாடகனை) ஆலம்பநம் – ஆலம்பநவிபாவம் என்று ஆலங்காரிகர் கூறுவர். இங்கே 'ஆலம்பநம்' என்னும் பதத்தோடு தொடங்குவதாலும், 'வைபவம்' என்பதாலும் இந்த ரஸ வ்யஞ்ஜநம் செய்யப்படுகிறது. 'ஹைத்வ: ஸ்ருஜா ரவஜ்ரத்யா வரிணதி தேஹே:' என்று சடகோபர் பக்திக்காதலின் வர்ணநத்தை இங்கே நினைக்கவேணும். பக்தி என்பதில் அஹங்காரலேசமும் கிடையாதென்பதை முதலிலேயே தெளிவாக்குவதற்காக பக்தியின் வடிவான இப்பெண் பாத்ரம் தான் பிறக்கையிலேயே தனக்கு மஹாப்ரபாவமிருந்தாலும் அது முழுவதும் தனக்கு ஆச்ரயமான நாயகனுடைய ப்ரபாவமே என்பதே அவள் நினைப்பு என்பதை அவள் பேச ஆரம்பிக்கும் முன்பே ஸ்வாமி அவள் நெஞ்சிலுள்ளதை விளக்குகிறார். இவளுடைய 'அஹம்' என்னும் நினைப்புக்கும் ஆச்ரயம் (முடிவு–நோக்கு) பரமனே: 'அஹங்

க்ரஹம்' என்பதைப்பற்றி முன் அங்கத்தில் விஸ்தரித்துள்ளது. இங்கே இவள் முதல் ச்லோகப்பேச்சு 'அஹம்' என்று தொடங்குகிறது. தான் என்பது அவனுலேயே, தன்னுயிரவனே, தான் அசேதநமான ம்ருத்பிண்டம் போன்றவளே என்கிற தெளிவும் உறுதியும் விஷ்ணுபக்திக்கு உண்டென்பதை ஸ்வாமி முதலிலேயே காட்டும் ரஸம் ரஸிக்கத்தக்கது. 'அவனஹம் தாஸோஹமிறே' என்று ஈட்டில் ஸாதித்தபடி இவள் 'அஹம் தாஸ்யஹம்' இறே.

> அஹம் வைகுண்ட தாஸ்யைக
> லாஸ்ய லீலா விநோதிநீ।
> விஷ்வக் விசேஷ ஸம்ஹார
> விப்ரமாரபடீ நடீ॥

அஹம்— என் காதலுக்கு விஷயமான வைகுண்டனெனும் உத்தமபுருஷனுக்கே அத்யந்தம் அதீநமான ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்தி சக்திகளையுடைய 'நான்' என்னும் இப்பெண். இவள் கந்யாப்பெண்; பரமபுருஷனைக்காதலிப்பவள்; இவள் நாட்யக்கலையில் மிகவும் வல்லவளான பெண். உத்தமராஜபுத்ரிகள்நாட்யப்பயிற்சி செய்து அதில் தேர்ச்சியடைவர். லாஸ்யம் தாண்டவம் என்று இருவித நாட்யமுறைகள். லாஸ்யம் என்பது லளித மெல்லிய நர்த்தநம். தாண்டவம் என்பது உக்ரநர்த்தநம். அதற்கு ஆரபடீ என்றும் பெயர். 'ருத்ரேணேதமுமாக்ருதவ்யதிகரே ஸ்வாங்கே விபக்தம் த்விதா' என்று காளிதாஸர் அர்த்தநாரீச்வரர் நர்த்தநம் செய்கையில் தேவியின் பாதி அம்சம் லளிதமாயும் ருத்ரனின் பாதி அம்சம் உக்ரதாண்டவமாயும் இருவகைப்பட்டதென்று வர்ணித்தார். இப்பெண்ணுடைய நர்த்தநம் லாஸ்யத்திலும், உக்ரதாண்டவத்திலும் சிறந்தது. பக்தர்கள் மனத்தில் பக்தி ஆநந்தநர்த்தநம் செய்யும். பக்தருடனும் பரவசமாய் ஆநந்த நர்த்தநம் செய்யும். 'உன்னைச் சிந்தைசெய்து செய்துன் நெடுமாமொழியிசை பாடியாடியென்முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன் யான்' என்னுமாழ்வாருடைய 'வைகுந்தா' திருவாய்மொழிப்பாசுரம் இங்கே கவி மநஸ்ஸிலோடுவது திண்ணம். அதை நினைத்து 'வைகுண்ட' எனும் திருநாமமும், ஆநந்தபரமான லாஸ்யநர்த்தந விநோதமும், முன்னைத் தீவினைகள் முழுவதையும் வேரறுத்து த்வம்ஸம் செய்வதும் இந்த ச்லோகத்தில் ஆழ்வார் பாசுரத்தில்போலவே அமைந்துள்ளன. பக்தியின் லாஸ்யநர்த்தநம் கேவலம் தன் விநோதத்திற்கேயொழிய வேறு ஒரு ப்ரயோஜநத்திற்காகவுமல்ல. கேவலம் லீலாவிநோதம். 'லோகவத்து லீலாகைவல்யம்' என்ற ஸூத்ரத்தில் வர்ணித்ததுபோல இது பக்திக்கு ஸ்வபாவமான (இயல்பான) விநோத ஆட்டம். அங்கும் பகவானுடைய சரீரமான விச்வத்திலுண்டு. 'க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்' என்று பட்டரநுபவம். 'வைகுண்ட' என்று இங்கு தொடக்கத்திலேயே குறிப்பது முடிவில்ப்ரவேசிக்கும் பரமபதத்தையும் ஸூசிக்கிறது. வைகுண்டனென்று பகவானுக்கு நாமம். வைகுண்டதாஸ்ய – வைகுண்டரென்னும் ஸ்வாமிக்கு தாஸ்யம் என்றும், எல்லையற்ற ஸகலவித தாஸ்யமும் என்றும் பொருள் கொள்ளலாம். வைகுண்டனுக்கு தாஸ்யம் வைகுண்டமாயிருக்க மநோரதம். அசேஷ சேஷதைகரதி என்று வர்ணிப்பர். இந்த தாஸ்யமொன்றுதான் ஆராதவின்பம். இதொன்றுதான் உண்மையான ஆத்மஸ்வரூபஸுகம். 'தவ தாஸ்ய ஸுகைக ஸங்கிநாம்' என்பர். இப்பெண் உக்ரதாண்டவநர்த்தநத்திலும் வல்லவள். அது பின்பாதியில் வர்ணிக்கப்படுகிறது. 'விச்வகில்பிஷஸம்ஹார' – முன் செய்த ஸர்வபாபங்களையும் வேரறுத்து ஸம்ஹரிக்கும். 'முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்து' என்று ஆழ்வார் பாடியதே இது. 'விப்ரம' என்பது விளையாட்டு; 'ஆரபடீநடீ' என்பது உக்ர, பைரவ, தாண்டவ, பயங்கரத்தைக்குறிப்பது. பக்தி என்பது முன்செய்த தீவினைகளுக்கெல்லாம் உடனே மாளச்செய்யும் ப்ராயச்சித்தம். விஷ்ணுபக்தி யெனும் உபாஸநம் தொடங்குகையிலேயே முன்பாபங்களை விநாசம் செய்யும் கொளுத்தி சாம்பலாக்கும். 'தததிகமே' – 'பக்தியோகத்தொடக்கத்திலேயே முன்வினைகள் உடனே மாளும்' என்று ஸூத்ரகாரர் கூறியதை இங்கே தொடக்கத்திலேயே

காட்டுவது ரஸிக்கத்தகுந்தது. 'ப்ரளயாரபடீநடீம் தீக்ஷாம்' என்று தயாசதகத்தில் பகவானுடைய கோபவீக்ஷணம் விச்வப்ரளயத்தைச்செய்யும் ஆரபடீ கூத்தடிப்பவள் என்று வர்ணிக்கப்பட்டது. இங்கே விஷ்ணுபக்திக்கு இந்த சக்திவருவது அவர் வீக்ஷணத்தால்தான், மேலே இந்த விஷ்ணுபக்திப்பெண் தயாதேவியைத் துதித்து அவளால்தான் எல்லாம் தனக்கு ஸித்திப்பதை 'வைகுண்டகூரவயா தேவ்யா' முதலிய ச்லோகங்களால் கூறுகிறாள். 'நெற்செய்யப் புல் தேயுமாப்போலே' என்றபடி பக்தி ஆநந்தநர்த்தநம் செய்யச்செய்ய பாபங்கள் தானே த்வம்ஸமாகும். 'இசை பாடியாடித்தீவினைவேரரிந்து' என்று ஆழ்வார் வர்ணநமுமப்படியே. 'தூய வமுதைப பருகிப் பருகி யென் மாயப் பிறவி மயர்வறுத்தேனே' என்பதுபோல்.

மேலும்—

ஸ்வாம்பா மே வாஸுதேவஸ்ய பாவிநவா
தாதஸ்ஸ்யமேதாத்ரு: ஸந்துஷ்டிஸ்ஸஹஜா
க்ஷமாப்ரியஸகீ ஸத்வ்ருத்திராஜ்ஞாகரீ ।
வித்யைவ ஸ்வயமேவ விச்வஜநவ்யாஸங்கநம்
க்ரீடிதம் ஸாரஹம் ப்ராணிதி
விஷ்ணுஸ்த்ரீவரா ஸந்திஷ்டதே ஸம்ஸ்ருதி: ॥

கந்யாப்பெண்ணாகிய தனக்குத்தாய், தகப்பன், கூடப்பிறந்தவள் தோழிகள் வேலைசெய்யும் சேடிகள், தன்படிப்பு,ருசிகள், விளையாட்டுகள். என்ன என்பதைக் கூறுகிறாள். என்னைப் பெற்றவள் ஜீவனுடைய கல்மஷமற்ற புத்தி. 'தாயைப் பார்த்து மகளைக்கொள்' என்பர். பக்தியென்னும் பெண்ணை சுத்தமான புத்தி தான் பெறவேணும். தகப்பனார் தர்மச்ரேஷ்டரான அந்த ஜீவர். எனக்கு ஸந்துஷ்டி என்பவள் கூடப்பிறந்தவள். ஸஹஜை. ஸந்துஷ்டிக்கு பக்திக்கு ஸஹஜமான ஸ்வபாவம் என்று பொருள். 'அத்வேஷ்டா ஸர்வபூதாநாம்' என்று தொடங்கி கீதையில் பகவான் பக்தர்களின் ஸ்வபாவத்தன்மைகளைக் காட்டுகையில் 'க்ஷமீ ஸந்துஷ்டஸ்ஸததம் யோகீ' என்றுபடித்ததை இங்கே நினைத்து ஸததமும் ஸஹஜ ஸந்தோஷ ஸ்வபாவத்தையும் க்ஷமையையும் சேர்த்து பக்தி பரிகரமாகப் பாடுவது. க்ஷமை என்பவள் எனக்கு ப்ரியஸகீ. ஒரு பெண்ணின் நற்குணத்தை அவளுடைய தோழிகள் இன்னாரென்று விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். 'ஸத்வ்ருத்தி: ஆஜ்ஞாகரீ', இதற்கு இரண்டுவிதமாய்ப் பொருள்கொள்ளலாம். வேலைக்காரி அல்லது சேடிகளின் தன்மையைக் கொண்டு யஜமானியின் தன்மையை அறியலாம். ஸ்வாமியின் சீலமும் தாஸரின் சீலமும் ஒன்றாயிருக்கும் என்பர்: எனக்கு ஊழியம் செய்யும் பரிவாரம் நல்நடத்தை (ஸத்வ்ருத்தி) என்னும் பெண். பக்திக்கு நல்லொழுக்கமான வர்ணாச்ரம ஸதாசார ஸஹிதமான கர்மயோகம் ஊழியம் செய்யும் அங்கமாகும். ஸதாசார வ்ருத்தி என்னும் பெண் எனக்கு ஊழியம் செய்பவள். இந்த ஊழியக்காரியைக்கொண்டு நான் ஆசைப்படும் நாயகனை பகவானுக்கு ஊழியம் செய்து ஆராதிப்பவள். (அல்லது) பகவானுடைய ஆஜ்ஞையான ச்ருதி ஸ்ம்ருதிகளின்படிநடப்பதே என்னுடையஸதாசாரம்; நல்லொழுக்கம், ஸத்வ்ருத்தி. பக்தியோடு ஸதாசாரம் கூடி இருக்கவேணும்; துராசாரம் கூடாது. விஷ்ணுபக்திக்கு துராசாரம் நாயகனுடைய ஆஜ்ஞாச்சேதமானதால் பகவத்த்ரோஹியாக்கும்; அவைஷ்ணவியாக்கும்.

ஒரு வரன்தேடும் கந்யாப்பெண்ணை உனக்கு வித்யை (படிப்பு) உண்டோ? என்று விசாரிப்பர். நானே வித்யை என்று அதற்குப் பதில். பராவித்யா என்று பக்திக்குப்பெயர். முண்டகோபநிஷத்தில் அப்படியே திருநாமம் கூறப்பட்டது. நானே ஸ்வயம் வித்யை; வித்யையே வடிவானவள்; எனக்கு வித்யை உண்டோ என்று வினவவேணுமோ?

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸதுபதேசம்

(10-வது ஸம்புடம் 3-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான்,
ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி.]

சிஷ்— ஸ்வாமிந்! தேவரீரை ஸேவித்து ஒரு மாதம் ஆகிவிட்டது. எங்கே எழுந்தருளியிருந்தது?

ஆசா— நான் மஹாபாபி; இரண்டு ஸ்ரீ அழகியசிங்கர்களின் ஸேவையை இழந்து முக்கூர் என்கிற ஒரு அக்ரஹாரத்தில் வாஸம் செய்துகொண்டு இருந்தேன். அவ்விடத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்கிற நம் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையில் நான் உனக்கு உபதேசித்ததை வாசித்துப்பார்த்தேன். உடனே உன் நினைவு வந்தது. உனக்கு இன்னும் சில விஷயங்கள் சொல்லவேண்டுமென்று அவஸரமாக வந்துவிட்டேன்.

சிஷ்—பரமஸந்தோஷம். ஆத்மாவைப்பற்றிய மற்ற விஷயங்களைப் பிறகு சொல்லலாம். உடல் எதனால் பண்ணப்பட்டது என்பதை முதலில் சொல்லவேண்டும்.

ஆசா— வெகு ஸுலபமாக நீயே தெரிந்து கொள்ளலாம். ஆனாலும் சொல்லுகிறேன் கேள். 11 கருவிகள் இந்த உடலில் அமைக்கப்பட்டிருப்பதாக முன்பே சொல்லியிருக்கிறேன் அல்லவா? அது தவிர மண், ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம் ஶப்ததந்மாத்ரை, ஸ்பர்சதந்மாத்ரை, ரூபதந்மாத்ரை, ரஸதந்மாத்ரை, கந்ததந்மாத்ரை, அஹங்காரம், மஹத் ப்ரக்ருதி ஆகிய இந்த 24 வஸ்துக்களால் செய்யப்பட்டது இந்த உடல்.

சிஷ்— தேவரீர் இப்பொழுது உபதேசம் பண்ணினது போதாது. ஒவ்வொரு விஷயமாய் கேட்கிறேன், சொல்லவேண்டும்.

ஆசா— அப்படியே. நீ கேட்டபிறகு நான் சொன்னால் உனக்கு நன்றாகப் புரியும் என்பதில் ஸந்தேஹமில்லை. இஷ்டம்போல் கேள், சொல்லுகிறேன்.

சிஷ்— ப்ரக்ருதி என்றால் என்ன?

ஆசா— ப்ரக்ருதி என்பது ஸத்வகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்கிற மூன்று குணங்களை உடையது. பத்தர்கள் (ஸம்ஸாரிகள்), முக்தர்கள், நித்யர்கள், என்று மூன்றுவகைப்பட்ட ஆத்மாக்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேனல்லவா? அந்த ஆத்மாக்கள் தவிர ப்ரஹ்மலோகம் வரையில் நாம் கண்ணால் பார்க்கக் கூடியதாயும் காதினால் கேட்கக்கூடியதாகவும் உள்ள ஸகல வஸ்துக்களையும் உண்டுபண்ணுவதற்குக் கடவுள் தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருக்கிற வெளுப்பு, கருப்பு, சிகப்பு, முதலிய ரூபங்களை உடைய ஆச்சர்யகரமான ஒரு வஸ்துதான் ப்ரக்ருதி. இந்த ப்ரக்ருதி என்கிற வஸ்துவிலிருந்து பகவான் மஹத் என்கிற ஒரு வஸ்துவை உண்டுபண்ணினார். இந்த வஸ்துவானது ஜீவாத்மாவை விட்டு பிரியாததாயிருக்கிற ஜ்ஞாநத்தை வ்ருத்தி பண்ணிக்கொள்வதற்கு உபயோகப்படுகிறது. இந்த மஹத் என்கிற வஸ்துவிலிருந்து பகவான் அஹங்காரம் என்கிற வஸ்துவை உண்டுபண்ணினார். இந்த அஹங்காரம் ஸாத்விகாஹங்காரம், ராஜஸாஹங்காரம், தாமஸாஹங்காரம்– என்று மூன்றுவகைப்பட்டது. ஸத்வகுணம் நிறைந்ததான ஸாத்விகாஹங்காரத்திலிருந்துதான் முன்சொன்ன கண், காது, மூக்கு, நாக்கு, முதலான 11 இந்த்ரியங்களை பகவான் உண்டுபண்ணினார். தாமஸ குணம் நிறைந்த தாமஸாஹங்காரத்திலிருந்து ஶப்ததந்மாத்ரையை உண்டுபண்ணினார். நடுவிலுள்ள ரஜோகுணம் நிறைந்த ராஜஸாஹங்காரம் கீழ்சொன்ன இரண்டு கார்யங்களுக்கும் உபயோகப்படுகிறது.

சிஷ்— ஸ்வாமிந்! ஶப்ததந்மாத்ரை என்

ருல் என்ன?

ஆசா— என்ன அவஸரம்? நானே சொல்லமாட்டேனா? சொல்லுகிறேன் கேள். ஒவ்வொரு வஸ்துவிற்கும் ஒவ்வொரு தனித் தனியான யோக்யதை உண்டு. அந்த யோக் யதையை அந்த வஸ்துவிற்கு குணம் என்று சொல்லுவார்கள். இப்பொழுது ஆகாசத்தை எடுத்துக்கொள்வோம். இதற்கு உள்ள உயர்ந்த குணம் ஶப்தம். லோகத்தில் எத்தனைவித மான ஶப்தங்களுண்டோ எல்லாம் ஆகாசத்தி லுள்ள ஶப்தத்திலிருந்துதான் உண்டாகிறது. ஆகையால் ஶப்தத்தை உடையது ஆகாசம். இந்த சப்தத்தோடு கூடின ஆகாசத்தை உண்டுபண்ணுவதற்குத் தகுந்ததாயும் அதிக மாகத் தெரியாததான ஶப்தத்தோடு கூடிய தாயுமுள்ள இளம் முளைபோல் இருக்கிற ஆகா சத்திற்குத்தான் ஶப்ததந்மாத்ரம் என்று பெயர். மனத்தில் பட்டுவிட்டதா?

சிஷ்— செடி உண்டாவதற்கு அந்த செடிக்குத் தகுந்த ருசி முதலானது நன்றாகத் தெரியாத முளை எப்படி காரணமோ அப் படியே ஶப்தத்தோடு கூடின ஆகாசமாகிற செடி உண்டாவதற்குக் காரணமான ஶப்தம் நன்றாகத் தெரியாத முளைபோலுள்ள ஆகாசத் திற்கு ஶப்ததந்மாத்ரை என்று சொன்ன தாகத்தெரிந்துகொண்டிருக்கிறேன்; ஸரிதானா?

ஆசா — நீ மிகவும் புத்திசாலிதான். மேலே சொல்லுவதற்கு எனக்கு அதிக ச்ரம மில்லை; சொல்லுகிறேன், கவனித்துக்கொள். ஆகாசத்திலிருந்து ஸ்பர்சதந்மாத்ரையை உண்டுபண்ணினார். ஸ்பர்சதந்மாத்ரத்திலிருந் து காற்றை பகவான் உண்டுபண்ணினார். காற் றாகிற ஒரு மரத்திற்கு முளைபோலிருக்கிற வஸ்துவிற்கு ஸ்பர்சதந்மாத்ரை என்று பெயர். காற்றிலிருந்து ரூபதந்மாத்ரத்தை உண்டுபண்ணினார். அதிலிருந்து நெருப்பை உண்டுபண்ணினார். ரூபதந்மாத்ரமென்றால் இப்போது நெருப்புக்கு இருக்கிற ரூபம் எவ் வளவோ அவ்வளவு ரூபம் தெரியாமல் இளம் முளைப்போல் இருக்கிற நெருப்பு. இதற்கு ரூபதந்மாத்ரம் என்று பெயர். நெருப்பி லிருந்து ரஸதந்மாத்ரத்தை உண்டுபண்ணி னார். அதிலிருந்து ஜலத்தை உண்டுபண்ணி னார். ரஸதந்மாத்ரமென்றால் வேறுவித மாக மனத்தில் படும்படி சொல்லுகிறேன் கேள். கெட்டித்தயிரை நினைத்துக்கொள். அது எதிலிருந்து உண்டாகிறது தெரிகிறதா? பாலில் கொஞ்சம் மோரை விடுகிறார்களல்லவா? தயிர் தோய்த்ததற்குப் பிறகு கொஞ்சநாழிகை கழித்துப் பார்த்தால் ஒரு தினுஸாகப் பாலா கவுமில்லாமல் தயிராகவுமில்லாமல் இளம் தயி ராக இருக்கும். பிறகு இன்னும் கொஞ்சம் நாழிகை ஆனால் கெட்டித்தயிராக ஆகிவிடும். யோசித்துப்பார். கெட்டித்தயிர் எதிலிருந்து உண்டாயிற்று? இளம் தயிரிலிருந்து. இதைப் போல் ரஸதந்மாத்ரமென்றால் இளம் தயிர் போலுள்ள இளம் ஜலம் இதற்கு ரஸதந்மாத் ரம் என்று பெயர். அதிலிருந்து கெட்டித் தயிர்போல் உண்டானது ஜலம். ஜலத்தி லிருந்து கந்ததந்மாத்ரத்தை உண்டுபண்ணி னான். அதாவது:— வாஸனை முதலானது அதிகமாகத் தெரியாமலிருக்கிற இளையதான ப்ருதிவிக்கு (பூமிக்கு) கந்ததந்மாத்ரம் என்று பெயர். தந்மாத்ரம் என்றாலும் தந்மாத்ரை என்றாலும் ஒன்றுதான். ஆகையால் நான் ஒரு ஸமயம் தந்மாத்ரை என்றும் மற்றொரு ஸமயம் தந்மாத்ரம் என்றும் சொல்லுவதைக் கேட்டு வேறுவிதமாக நினைக்கவேண்டாம். கந்ததந்மாத்ரத்திலிருந்து பூமியை உண்டுபண் ணினார். ஆகாசம், காற்று, நெருப்பு, ஜலம், பூமி இந்த ஐந்திற்கும் பூதங்கள் என்று பெயர். இந்த பூதங்கள் ஐந்து தந்மாத்ரைகள் ஐந்து, ஆக10, இந்த்ரியங்கள் 11, அஹங்காரம் மஹத் ப்ரக்ருதி என்று மூன்று, ஆக 24 வஸ்துக் களால் செய்யப்பட்டது இந்த உடல் என்று தெரிந்துகொள்.

சிஷ்— இந்த்ரியங்களை ஸாத்விகாஹங் காரத்திலிருந்து பகவான் உண்டுபண்ணினார் என்று சொன்னீர்களே அது ஒரு ஜீவாத்மா வுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு உடலுக்கு ஸரி யாகப்போய்விட்டது. மற்ற எத்தனையோ கோடிக்கணக்கான உடல்கள் இருக்கின்றனவே அவைகளுக்கு 11 இந்த்ரியங்கள் எப்படி ஸ்வாமி போதும்?

ஆசா— பெரிய கேள்வி கேட்டுவிட்ட தாக ஒரு தினுஸாக நினைத்துக்கொண்டு இருக்

கின்றதுப்போல் தோன்றுகின்றது. சிறிய குழந்தைகள் கூட இதற்கு ஸமாதானம் சொல் லும். 11 இந்த்ரியங்கள் என்று சொன்னது நானுகச்சொல்லவில்லை. ஶாஸ்த்ரத்தில் 11 இந் த்ரியங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறது. அதற்கு அர்த்தம் 11 இந்த்ரியங்களும் சேர்ந்து ஒரு உடலுக்கு ஏற்பட்ட வகுப்பு. இதைப் போல் எத்தனை ஆயிரம் கோடி உடல்கள் கா ணப்படுகின்றனவோ கேட்கப்படுகின்றனவோ அவ்வளவு உடல்களுக்கும் ஒவ்வொரு உடலுக் கும் பதினேரு பதினேரு இந்த்ரியங் களாக எத்தனையோ ஆயிரம்கோடி இந்த்ரியக் கூட்டங்களை பகவான் ஸ்ருஷ்டித்ததாக அர்த்தம்; தெரிந்தா?

சிஷ்— (வெட்கமடைந்து) ஸ்வாமின்! ஒரு வரும் இப்படிச் சொல்லவில்லையே என்று கேட்டேன்; க்ஷமிக்கவேணும். மோக்ஷமடைந் தவர்களுக்கு சரீரமுண்டா? நித்யஸூரிக ளுக்கு சரீரம் உண்டா?

ஆசா— வேண்டியபோது சரீரத்தோடு இருக்கலாம்; வேண்டாதபோது சரீரமில்லாம லிருக்கலாம்.

சிஷ்— பகவான் இவ்விடத்தில் பதினேரு பதினேரு கூட்டங்களாக இந்த்ரியங்கள் ஸ்ருஷ்டித்தாரே, அப்போது வைகுண்டத்தி லுள்ள உடல்களுக்கும் சேர்த்துத்தானே இந் த்ரியங்களை ஸ்ருஷ்டித்தார்.

ஆசா— வைகுண்டவாஸிகளான நித்யர் முக்தர் என்கிறவர்களுடைய சரீரத்திற்கும் இந்த ப்ரக்ருதியிலிருந்து ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த்ரியங்களுக்கும் ஸம்பந்தமே கிடையாது. பத்தர்கள் (மோக்ஷத்தை யடையாமல் பிறப்பு இறப்பு முதலானதுகளில் அகப்பட்டுக்கொண் டு திண்டாடுகிற ஜீவர்கள்.) என்று சொன் னேமே இவர்கள் உடலுக்குத்தான் இந்த இந்த்ரியங்கள் பகவானுல் ஸ்ருஷ்டிக்கப்பட் டிருக்கின்றன.

சிஷ்— அவனவன் பண்ணின புண்ய பாபங்களுக்குத் தகுந்ததுபோல் அந்தந்த ஆத்மாக்களுக்குக் கொடுத்திருக்கிற உடல் எப்படியிருந்தாலும் ஒரு ஸமயத்தில் அழிந்து விடுகின்றதல்லவா? அப்பொழுது அந்த உடலிலுள்ள உடலுக்காக ஏற்பட்ட 24 வஸ் துக்களும் அழிந்துவிடவேண்டியதுதானே? ஆனுல் இதை நான் கேட்கவேண்டியதில்லை. கட்டாயம் இந்த தேஹம் அழியும்போது இதைப்பண்ணுவதற்காக ஏற்பட்ட எல்லா வஸ்துக்களும் அழிந்துவிடவேண்டியதுதான். ஆனுலும் ஆசார்யன்மூலம் தெரிந்துகொள்வது நல்லது என்று தோன்றியபடியால் கேட்கி றேன் சொல்லவேணும்.

ஆசா— நீ கேட்க ஆரம்பித்தபடியால் எனக்கு நல்ல பெயர். இல்லாவிட்டால் நீ தீர்மானம் செய்துகொண்ட விஷயத்தை யாரி டத்திலாவது சொன்னுல் 'உனக்குச்சொல்லிக் கொடுத்த முட்டாள் யாரடா?' என்று கேட் பார்கள். அவர்கள் நான் சொல்லிக்கொடுக் காமல் நீயாக சொல்லுவதாகத் தெரிந்துகொள் வார்களா? தெய்வாதீனமாகக் கேட்டாயே! பொறுமையுடன் கேள். ப்ரளயம் என்பது ஒரு ஸமயத்தில் வருகின்றது. அப்பொழுது வைகுண்டலோகம் தவிர்த்து எல்லா லோகங் களும் எல்லா வஸ்துக்களும் அழிந்துவிடுகின் றன. அழிந்தவஸ்துக்கள் எப்படியிருக்கின் றன தெரியுமா? ஆயிரம் பானைகளை அழித்துப் பொடியாக அறைத்தால் அவைகள் எப்படி ஆகின்றன? அந்த பானைகள் எந்த மண்ணி லிருந்து பண்ணப்பட்டனவோ அந்த மண் ணுக ஆகிவிடுகின்றன அல்லவா? அதைப் போல் எல்லாமழிந்துவிட்டால் ஜலம், காற்று, பூமி, இந்த்ரியங்கள் முதலான எல்லா வஸ்துக் களும் எதிலிருந்து உண்டாயினவோ அந்த வஸ்துவாகிவிடுகின்றன. எந்த வஸ்துவாக ஆய்விடுகின்றன? சொல் பார்ப்போம்.

சிஷ்— இன்றுதானே உபதேசம் பண்ணி னீர்கள். அதற்குள் மறந்துவிடுவேனு? ப்ர க்ருதி என்கிற ஒரு வஸ்துவிலிருந்து எல்லா வஸ்துக்களும் உண்டுபண்ணப்பட்டன என்று ஶாஸ்த்ரம் சொல்லுவதாகச் சொன்னீர்களே அந்த ப்ரக்ருதிதான் மிச்சம். (பானைகளை சூர்ணமாக்கினுல் மண் மிச்சம்போல்) எல்லா வஸ்துக்களையும் அழித்து சூர்ணமாக்கினுல் இதுகளுக்கெல்லாம் காரணமான ப்ரக்ருதி தான் மிச்சம். ஸ்வாமி! ஸரிதானே.

ஆசா— மிகவும் ஸரியான விஷயம்தான். அப்பொழுது எல்லா உடல்களுமழிந்துவிட்ட

படிடால் அதற்குள்ளேயே இருந்த ஜீவாத்மாக்கள் எல்லாம் எங்கேயிருக்கின்றன தெரியுமா?

சிஷ்— சொல்லிக்கொடுக்காத விஷயத்தைக் கேட்டால் எப்படி சொல்லுகிறது?

ஆசா— எல்லாமழிந்தபிறகு ப்ரக்ருதி தான் மிச்சமென்று தெரிந்துகொண்டிருக்கிறாயல்லவா? அந்த ப்ரக்ருதியில் எல்லா ஆத்மாக்களும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அதாவது:- தட்டான் ஒரு மெழுகு உருண்டையை வைத்துக்கொண்டிருக்கிறான். உறைக்கல்லில் தங்கத்தை தேய்த்து மாற்றுப்பார்த்த பிறகு அந்த உறைக்கல்லிலுள்ள தங்கப்பொடிகளை அந்த மெழுகுருண்டையில் ஒத்திக்கொள்வான். அப்பொழுது தங்கப்பொடிகள் மெழுகுருண்டையில் மறைந்து கிடப்பது போல் ஜீவாத்மாக்கள் ப்ரக்ருதி என்கிற வஸ்துவில் மறைந்து கிடக்கிறதுகள். மேலும் சொல்கிறேன் கேள். பிறகு பகவான் ஸ்ருஷ்டி என்பதை ஆரம்பிக்கிறார். அதாவது:— இந்த ப்ரக்ருதியில் அழுந்திக்கிடக்கிற ஆத்மாக்களுக்கு சரீரம் கொடுப்பதற்காக ஸ்ருஷ்டி பண்ண ஆரம்பிக்கிறார். ஆத்மாக்களுக்கு எதற்காக உடல் கொடுக்கிறார் தெரியுமா? ப்ரக்ருதியில் ஆத்மாக்கள் அழுந்திக்கிடக்கும் போது ஆநந்தமே (ஸுகமே) கிடையாது. அதைக்கண்ட பகவான் க்ருபையால் உடலளிக்க ஸ்ருஷ்டியை ஆரம்பிக்கின்றார். என்ன எண்ணம் பகவானுக்கு? உடல் கொடுத்தால் எப்படியாவது நம்மை ஆராதித்து முக்தியடையட்டும் என்று எண்ணம். ஸ்ருஷ்டிக்கு ஆரம்பிக்கும் ஸமயத்தில் முதலில் ப்ரக்ருதியிலிருந்து முன்சொன்னபடி எல்லாவஸ்துக்களையும் உண்டுபண்ணி அதனால் ஆத்மாக்களுக்கு உடல்களை உண்டுபண்ணுகிறார். உனக்கு இதுவரைக்கும் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். ஸந்தேஹமிருந்தால் பிறகு கேள். உடல் அழியும்போது எல்லாவஸ்துவும் அழியவேண்டியதுதானே என்று கேட்டாயே, சொல்லுகிறேன் மிகவும் ஊக்கத்துடன் கேள். பெரிய விஷயமிது. இந்த ஆத்மா உடலைவிட்டு பிரியும்போது 11 இந்த்ரியங்களும் மற்றுமுள்ள உடலுக்கேற்பட்ட ஸாமான்களும் கூடவே தான் போகின்றன.

சிஷ்— மயக்கமுண்டாகிறது. தேஹத்தை விட்டு பிரிகிறான் என்று சொல்லிவிட்டு எல்லா வஸ்துக்களோடும் போகிறான் என்றால் எப்படி ஸ்வாமின்? புரியவில்லை, நன்றாகச் சொல்லவேண்டும்.

ஆசா— பகவான் என்ன செய்கிறார் தெரியுமா? இந்த உடலைவிட்டு ஆத்மா பிரியும்போது இந்த உடலிலுள்ள பத்து இந்த்ரியங்களை மனஸ் என்கிற பதினோருவது இந்த்ரியத்தோடு சேர்த்து இந்த பதினோரு இந்த்ரியங்களையும் ப்ராணவாயுவோடே சேர்த்து இதை ஆத்மாவோடே சேர்த்து, பிறகு உடலில் மிகுதியாயுள்ள மண், ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், முதலான வஸ்துக்களில் ஒவ்வொன்றிலும் ஸாரமான அம்சத்தை எடுத்து ஒரு உடலாகச் செய்து, அந்த உடலுக்குள் எல்லா இந்த்ரியங்களோடும் ப்ராணவாயுவோடும் சேர்ந்திருக்கிற ஜீவாத்மாவை இருக்கும்படி செய்து, அந்த உடலோடு இப்போது கண்ணுக்குத்தெரிகிற உடலிலிருந்து வெளியில் கிளம்புகிறான். இப்போது ஜீவாத்மா இந்த உடலைவிட்டு பிரிந்து எப்படிப் போகிறான் என்று மனத்தில் பட்டதா?

சிஷ்— நன்றாகத் தெரிந்தது. ஆத்மா எல்லா இந்த்ரியங்களோடு சேர்ந்துகொண்டு இந்த பூத உடலிலிருந்து எடுக்கப்பட்ட ஸாரமான வஸ்துவால் செய்யப்பட்ட உடலில் புகுந்துகொண்டு கண்ணுக்குத் தெரிகிற இந்தப் பெரிய உடலிலிருந்து வெளியில் கிளம்பிப் போகிறான் என்று நீங்கள் சொன்ன விஷயம் என் மனத்தில் பட்டது ஸ்வாமி!

ஆசா— ஸரிதான். ஆத்மா ஒரு உடலோடு போகிறான் என்று சொன்னேனல்லவா? அந்த உடலுக்கு ஸூக்ஷ்மசரீரம் என்று பெயர். ஸூக்ஷ்மசரீரம் என்றால் நம்மைப் போன்றவர்கள் கண்ணுக்குத் தெரியாது. எந்த இடங்களிலும் நுழைந்துபோகக்கூடியது. புண்ணியம் செய்த சிலர் கண்ணுக்குத் தெரியும். இப்பொழுது சொன்ன ஸூக்ஷ்ம உடலோடு ஜீவாத்மா வெளியில்

கிளம்பிவிட்டபிறகு இந்தப் பெரிய உடலில் சக்கைபோலுள்ள சில ஸாமான்கள்தானிருக்கின்றன. ஆகையால் இந்த உடலிலுள்ள எல்லா வஸ்துக்களோடும்தான் ஜீவாத்மா போகிருன் என்று உனக்குச் சொன்னேன்.

பிறப்பு என்பது இப்போதுபோன ஸூக்ஷ்ம சரீரத்தோடு புருஷன் வழியாக ஒரு தாய்வயிற்றில் போய்ச்சேர்ந்து அவ்விடத்தில் சுக்ல சோணிதங்களில் இருக்கிருன். பிறகு கர்ப்பப்பையில் ஒருவிதமாக சரீரம் உண்டாகிறது. தகுந்தகாலம் வந்தவுடனே தாய் வயிற்றிலிருந்து வெளியில் வருகிருன். தாய் வயிற்றில் இந்த ஆத்மாவுக்கு சுக்லசோணிதங்களாலே பண்ணப்பட்ட உடலில் தன்னுேடு கூடவே கொண்டுபோன இந்த்ரியங்களை அந்தந்த இடங்களில் இருக்கும்படி செய்கிருன். பிறகு இதற்கு பூத உடல்- சரீரம்- என்று பெயர். இப்படித் தாய் வயிற்றிலிருந்து வெளியில் வந்தால் 'பிறந்தான்' என்று சொல்லுகிறோம். இதேமாதிரி ஆத்மாக்களுக்கு பிறப்பு இறப்பு நடந்துகொண்டுவருகிறது. ஆகையால் ஆத்மாவுக்கு ஸ்ருஷ்டிகாலத்தில் கொடுக்கப்பட்ட பதினேரு இந்த்ரியங்களும் மறுபடியும் ப்ரளயகாலம் வரையிலும் ஆத்மாவை விட்டுப் பிரியாது. ப்ரளயகாலத்தில்தான் ப்ரக்ருதி தவிர அதிலிருந்து உண்டான எல்லா வஸ்துக்களும் அழிந்துவிடுகின்றன என்று சொல்லியிருக்கிறபடியால் அப்போது ஜீவாத்மாக்கள் இந்த்ரியங்கள் முதலியவை ஒன்றுமில்லாமல் மெழுகு உருண்டையில் ஒட்டிக்கொள்கிற தங்கப்பொடிபோல் ப்ரக்ருதியில் ஒட்டிக் கிடக்கின்றன.

சிஷ்— ப்ரளயம் வருவதற்கு முன் நடுவில் ஆத்மா மோக்ஷமடைந்தால் இந்த்ரியங்களுக்கு என்ன நேருகிறது?

ஆசா— (சிரித்துக்கொண்டு) சரீரத்தைவிட்டுக் கிளம்பும்போது ஸூக்ஷ்ம உடல் ஒன்று உண்டு என்று சொன்னேமே அந்தமாதிரி ஸூக்ஷ்மஉடலோடுதான் வைகுந்தத்திற்கு போகிறஆத்மாவும் போகிருன். வைகுண்டத்திற்கு ஸமீபத்தில் விரஜை என்ற பரமபவித்ரமான ஒரு நதி இருக்கிறது. அதில் இந்த ஆத்மா ஸ்நாநம்செய்து ஸூக்ஷ்மசரீரத்தை விட்டுவிடுகிருன். அப்பொழுது இந்த இந்த்ரியங்கள் பதினெனொரும் மூலைக்குமூலை சிதறிப்போய் விடுகின்றன. ப்ரளயகாலத்தில்தான் அவைகள் அழிகின்றன.

சிஷ்— மரம் செடி கொடி முதலான உடல்கள் வரும்போது எப்படி இந்த்ரியங்கள் இருக்கின்றன?

ஆசா— அப்பொழுதும் ஆத்மாவை விட்டு இந்த்ரியங்கள் பிரிவதில்லை, மரம் செடி கொடி முதலிய உடல்களை விட்டு ஆத்மா பிரிந்துபோகும்போதும் முன்பு சொல்லிவந்த மிகநுட்பமான சரீரத்தோடுதான் வெளியே செல்கிருன். பிறவி ஸ்த்ரீ புருஷர்களுடைய ஸம்பந்தத்தால் ஏற்பட்டாலும் ஸரி வேறு எவ்விதமான ஸம்பந்தத்தால் ஏற்பட்டாலும் ஸரி எப்போதும் இந்த்ரியங்கள் ஆத்மாவை விட்டுப்பிரிகிறதில்லை.

சிஷ்— 'ப்ரக்ருதி என்பது ஸத்வகுணம் ரஜோகுணம் தமோகுணம் என்ற மூன்று குணங்களோடு சேர்ந்த ஓர் வஸ்து. அது எப்பொழுதும் இருக்கக் கூடியது' என்று சொன்னீர்களே ஸத்வகுணம் ரஜோகுணம் தமோகுணம் என்றால் என்ன?

ஆசா—இனிப்பு கசப்பு காரம் முதலியவைகள் சில வஸ்துக்களில் காணப்படுகின்றனவே அதை அவ்வஸ்துக்களுடைய குணங்கள் என்று சொல்கிறோம். அதைப்போல் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று குணங்கள் ப்ரக்ருதி என்ற வஸ்துவில் இருக்கின்றன. இந்த முக்குணங்களும் அந்த ப்ரக்ருதியிலிருந்து உண்டுபண்ணப்பட்ட எல்லா வஸ்துக்களிலும் இருக்கின்றன.

சிஷ்— ஒவ்வொரு குணங்களால் என்ன ஏற்படுகிறது?

ஆசா— இந்த உடல் அந்த இருபத்திநாலு வஸ்துக்களால் பண்ணப்பட்டது என்று சொன்னேமல்லவா? இந்த இருபத்திநான்கு வஸ்துக்களிலும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களும் நிறைந்து கிடக்கின்றன. ஸத்வகுணமானது இந்த உடலிலிருக்கிற ஆத்மாவுக்கு மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைவதற்கு ஸாதநமான நல்ல ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுகிறது. ரஜோ

குணமானது இந்த லோகத்திலே இருக்கிற வஸ்துக்களை பெரியதாக எண்ணி அநுபவிக்க வேணும் என்கிற ஆசைக்கு காரணமான புத்தியை உண்டுபண்ணுகிறது. தமோகுணமானது ஶாஸ்த்ரங்களில் நம்பிக்கையை இழக்கச்செய்து நாஸ்திகவாதம் செய்யும்படி பண்ணி நல்லது கெட்டது என்பதை அறியமுடியாமல் செய்து புத்தியைக் கெடுக்கிறது.

சிஷ்— பெரிய ஸந்தேஹம் ஒன்று இப்பொழுது வந்துவிட்டது. எல்லா ஆத்மாக்களுடைய உடல்களில் இந்த மூன்று குணங்கள் நிறைந்திருக்கிறதாகச் சொன்னீர்களே அப்படியிருக்க பல ஜாதி உடல்கள் அதிலும் உயர்வு தாழ்வு முதலானவைகள் எப்படிச் சொல்லமுடியும்? என் மனத்தில் நன்றாகப் படும்படி சொல்லவேண்டும்.

ஆசா— உனக்குச் சொல்லாமல் யாருக்குத் தான் சொல்லப்போகிறேன். இந்த விஷயத்தில் நாற்பதாவது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸாதித்த விஷயம் ஒன்று உண்டு; அதை சொல்லுகிறேன் கேள். ஒரேவிதமான சந்தனக்கட்டையால் அரைத்த சந்தனம் ஒரு கடையில் நான்கு வீசை வைத்திருக்கிறான். மூன்று தினுஸான வாஸனை ஸாமான்களை விலைக்கு வாங்கினான். அதில், ஒரு தினுஸு வாஸனை வஸ்துவின் விலை ஒரு பலத்திற்கு 500 ரூபாய். மற்றொரு வாஸனை ஸாமானின் விலை பலம் ஒன்றுக்கு 50 ரூபாய். மூன்றாவது வாஸனை த்ரவ்யத்தின் விலை பலம் ஒன்றுக்கு 5 ரூபாய். நான்கு வீசை சந்தனத்தையும் தனித்தனியாகப் பிரித்துவைத்தான். முதல் வீசை சந்தனத்தில் 500ரூ விலையுள்ள வாஸனை ஸாமானில் ஒரு விராகனிடை சேர்த்துக் கலந்தான். பிறகு 50ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவில் அரைவிராகனிடையும் 5ரூ விலையுள்ள வாஸனை வஸ்துவில் கால்விராகனிடையும் சேர்த்துக்கலந்து வைத்துவிட்டான். அப்படியே இன்னும் ஒருவீசை சந்தனத்தில் 50 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை ஒரு விராகனிடை சேர்த்து 500 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை அரை விராகனிடை சேர்த்தான்; 5 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை கால் விராகனிடை சேர்த்து சந்தனத்தை கலந்துவைத்தான். மூன்றாவது வீசை சந்தனத்தில் 5 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை ஒரு விராகனிடை சேர்த்து 50 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை அரை விராகனிடை சேர்த்து 500 ரூபாய் விலையுள்ள வாஸனைவஸ்துவை மூன்றுவீசம் விராகனிடை சேர்த்து கலந்துவைத்தான். நாலாவது வீசை சந்தனத்தில் ஐந்து ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை ஒன்றரை விராகனிடை சேர்த்து 50 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை முக்கால் விராகனிடை சேர்த்து 500 ரூபாய் விலையுள்ள வாஸனை வஸ்துவை அரைக்கால் விராகனிடைசேர்த்துக் கலந்துவைத்தான். இப்போது நாலுவீசை சந்தனத்தையும் தனித்தனியாகத்தானே வைத்திருக்கிறான். முதல் வீசை சந்தனத்திலும் மூன்று தினுஸான வாஸனைகள் கலக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது வீசையிலும் மூன்று தினுஸு வாஸனை வஸ்துக்கள், மூன்றாவது வீசையிலும் மூன்று தினுஸு வாஸனைகள், நான்காவது வீசையிலும் மூன்று தினுஸு வாஸனை வஸ்துக்கள் கலக்கப்பட்டிருக்கின்றன. ஸந்தேஹமே கிடையாது. முதல்வீசை சந்தனம் என்னவிலை? ரூ52–10–0 ஆகிறதல்லவா இரண்டாவது வீசை சந்தனம் விலை என்ன ஆகிறது? 30–2–0 அதைப்போல் மூன்றாவது வீசை சந்தனம் என்ன விலை ஆகிறது பார். 12–6–0 ஆகிறது. நாலாவது வீசை சந்தனத்தின் விலை என்ன ஆகிறது? 10–12–0 ஆகிறது அல்லவா? ஒரே சந்தனக்கட்டையால் அரைத்த சந்தனமானாலும் ஒவ்வொரு வீசையிலும் மூன்று மூன்று வாஸனைகள் கலந்து இருந்தபோதிலும் அந்தந்த சந்தனத்தில் கலக்கப்பட்டிருக்கிற வாஸனை வஸ்துக்களின் மதிப்பிற்குத் தகுந்தாற்போல் விலையில் உயர்வு தாழ்வு நாம் நேரில் காண்பதுபோல் ஸத்வகுணத்தின் விலை மதிப்பு 500 ரஜோகுணத்தின் விலை மதிப்பு 50 தமோகுணத்தின் விலை மதிப்பு 5 என்று நினைத்துக்கொள். நாலு ஜீவாத்மாவுக்கு நாலு உடல் கொடு. முன்பு சந்தனத்தில் வாஸனை சொன்னதுபோல் ஒரு ஆத்மாவின் உடலில் ஒரு பங்கு ஸத்வகுணம் அரைப்பங்கு ரஜோ

குணம் கால்பங்கு தமோகுணம். மற்றொரு ஆத்மாவின் உடலில் ரஜோகுணம் ஒரு பங்கு தமோகுணம் கால்பங்கு ஸத்வகுணம் அரைப் பங்கு, மூன்றாவது ஆத்மாவின் உடலில் தமோகுணம் ஒருபங்கு ரஜோகுணம் அரைப்பங்கு ஸத்வகுணம் மூன்றுவீசம் பங்கு, நான்காவது ஆத்மாவின் உடலில் தமோகுணம் ஒன்றரைப் பங்கு ரஜோகுணம் முக்கால்பங்கு ஸத்வகுணம் அரைக்கால்பங்கு இப்படியாக அந்தந்த ஆத்மா பண்ணின புண்யபாபத்துக்குத் தகுந்தபடி ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற குணங்களை ஒவ்வொரு உடல்களிலும் ஒவ்வொருவிதமாக அதிகமாகவும் குறைச்சலாகவும் வைத்து ஸ்ருஷ்டி பண்ணியிருக்கிறார் பகவான் என்று கீதையில் பல இடங்களில் எல்லோருக்கும் புரியும்படி சொல்லியிருக்கிறபடியால் ஒவ்வொரு தினுஸான உடலுக்கு ஒவ்வொருவிதமாக ப்ராஹ்மணன் என்றும் க்ஷத்ரியன் என்றும் வைச்யன் என்றும் சூத்ரன் என்றும் கடவுளே பேர் வைத்தார். என்று பெரிய கூட்டத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் உபங்யாஸம் ஸாதித்தருளினார்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ப்ரஹ்லாத சரித்ரம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. கோ. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் தமிழ்ப்பண்டிதர், அவளூர்.]

நாட்கள் பல சென்றன. ஹிரண்யகஶிபுவுக்குக் காட்டவேண்டுமென்ற எண்ணமுண்டாய், சண்டாமர்க்கர் ப்ரஹ்லாதனை ராஜக்ருஹத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவன் மாதா கபாது குழந்தையை நீராட்டி அலங்காரம் செய்தாள். அலங்கரிக்கப்பட்ட ப்ரஹ்லாதனைச் சண்டாமர்க்கர் ஹிரண்யகஶிபுவினிடம் அழைத்துச் சென்றனர். உடனே ப்ரஹ்லாதன் தன் பிதாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நிற்க, அஸுரேசன் குழந்தையை ஆசீர்வதித்து மார்புறத்தழுவித் தன்மடியில் வைத்துக்கொண்டு ‘இதுவரையில் நீ குருவினிடம் கற்றவற்றில் ஸாரதமமான விஷயங்களைச் சொல்’ என்றான்.

ப்ரஹ்லாதன் சொல்லுகிறான்:— ‘அப்பா! எவனிடமிருந்து சராசரமான ஜகத் உண்டாயிற்றோ, எவன் ஸகலத்துக்கும் நிமித்தகாரணமாக இருக்கின்றானோ, அந்த விஷ்ணு நமக்கு மங்களத்தைப் பண்ணட்டும்; அந்த விஷ்ணுவின் ஸ்வரூப குண விபூதிகளைக் கேட்பது [ஶ்ரவணம்], அவனுடைய நாமஸங்கீர்த்தநம் செய்வது, [கீர்த்தநம்], அவனது ஸ்வரூபத்தை த்யாநம்செய்வது [ஸ்மரணம்], அவன் திருவடிகளில் பரிசர்யை செய்வது [பாதஸேவனம்], அவனை பூஜை செய்வது [அர்ச்சநம்], அவனுக்கு நமஸ்காரம் செய்வது [வந்தநம்], அவனுக்குத் தொண்டனாகிப் பணிவிடை செய்வது [தாஸ்யம்], அவனிடம் ஸ்நேஹம் கொள்வது [ஸக்யம்], தனது ஆத்மாவை அவனிடம் ஸமர்ப்பிப்பது [ஆத்மநிவேதநம்] என்னும் இந்த ஒன்பதுவிதமான பக்தியானது புருஷனால் நிஜமாகப் பண்ணப்பட்டு அவனிடமே ஸமர்ப்பிக்கப்பட்டதாகில் அவன்தான் மஹாபுருஷன். இதைத் தெரிவிக்கும் ஶாஸ்த்ரம்தான் யாவற்றுள்ளும் உயர்ந்ததென நினைக்கிறேன்.’ என்று பதிலளித்தான்.

ஹிரண்யகஶிபு கேட்டுக் கோபமிகுந்தவனாய், “இன்னும் உனக்குத் துஷ்டபுத்தி விடவில்லையே! இது குரு முகத்தாலும் வந்ததல்லவே! பின் எங்கிருந்து இந்த துர்ப்புத்தி உண்டாயிற்று?” என்று சொல்லிக்கொண்டே மடியிலிருந்த குழந்தையைக் கீழே தள்ளினான், அண்டையிலிருந்த அஸுரர்களை நோக்கி, “இந்தத் துஷ்டனைச் சொல்லுங்கள்; இவன் உயிருடனிருந்து பயனில்லை. பிதாவாகிய என்னைப் புறக்கணித்ததுமின்றி

தன் சிற்றப்பனைக்கொன்ற விஷ்ணுவின் பாதங்களைப் பூஜிக்கிறான். யோசித்துப்பார்த்தால் விஷ்ணு என் தம்பியைக் கொன்றவனல்லன்; இவனே என் தம்பியைக்கொன்றவன். இப்படித்தான் இவனைப்பற்றி நினைக்கிறேன். இவன் இந்த ஐந்தாவதுவயதிலேயே தெய்வங்களெனப்படும் பூஜ்யர்களான அன்னையையும் அத்தனையும் அவமதிக்கிறானே! அந்த விஷ்ணுவுக்குத்தான் இவன் என்ன நன்மை செய்யப்போகிறான்? வ்ரணத்தினால் சரீரத்தில் ஓர் அங்கத்திற்குப் பழுது ஏற்பட்டால் அதை வெட்டிக் களைந்து சரீரத்தின் மிகுந்த பாகத்துக்கு ஸுகத்தைச் செய்துகொள்வது போல், இவனைக் கொன்றொழித்தால் நம் குலம் தழைக்கும்; ஆதலின் பல்வகை உபாயங்களையும் கைக்கொண்டு இவனைக் கொலை செய்யுங்கள்'' எனக் கட்டளையிட்டான்.

ஆயிரக்கணக்கான தைத்யர்கள் கைகளில் ஆயுதமேந்தி ப்ரஹ்லாதனைக் கொல்லும் பொருட்டுப் புறப்பட்டார்கள். ப்ரஹ்லாதன் அவர்களை நோக்கி. ''அஸுரர்காள்! உங்களுக்குள்ளும், நீங்கள் கொண்டுள்ள ஆயுதங்களிலும், என்னிடமும் விஷ்ணு இருக்கின்றார். அவர் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்தவர்; ஆதலின் உங்கள் ஆயுதம் என்னை நெருங்கி ஒன்றும் செய்யாது' என்றுரைத்தான். பிறகு அத்தைத்யர்கள் ப்ரஹ்லாதனைப் படைக்கலங்களால் பல்வகையிலும் புடைத்தபோதிலும், அவை ப்ரஹ்லாதனைச் சிறிதும் ஊறு செய்ய மாட்டாதொழிந்தன. பார்த்தான் ஹிரண்யன். ப்ரஹ்லாதனைக் கூப்பிட்டு, ''இனிப் பகைவனைப் போற்றித் துதியாதே; உனக்கு அபயமளிக்கிறேன்; நல்வழியில் நட'' எனவும், ப்ரஹ்லாதன் ''எவனை நினைத்தமாத்ரத்தில் பிறப்பிறப்புப் பிணி மூப்புகள் முதலிய எல்லாப் பயங்களும் நீங்குமோ, அப்படிப்பட்ட அநந்தன் என் மனத்தில் விளங்கிக் கொண்டிருக்க, எனக்குப்பயமென்பதேது? அவனே பயக்ருத்; அவனே பயநாசனன்'' என்றான்.

அதன் மேல் ஹிரண்யகசிபு மனந்தாங்காமல் பயங்கரமான தக்ஷகன் முதலான மஹா ஸர்ப்பங்களை ஏவிவிட்டு ப்ரஹ்லாதனைக் கடிக்கச் செய்தான். அப்போது ப்ரஹ்லாதன் எம்பெருமானிடம் புத்தியை த்ருடமாகச் செலுத்தித் ததேகத்யாநபரனாய் ஆநந்தாநுபவம் பண்ணிக்கொண்டு தன் ஶரீரத்தையும் மறந்துவிட்டான். ஆதலின் ஸர்ப்பங்கள் இவன் ஶரீரத்தைக் கடிக்கமாட்டாது ஹிரண்யனைப் பார்த்து, ''ப்ரபோ! இவனைக் கடித்ததால் எங்கள் பற்கள் ஒடிந்துவிட்டனவேயன்றி, இவன் தோல் கொஞ்சமேனும் பிளவுபடவில்லை; நாங்கள் என் செய்வோம்?'' என்று சொல்லிச் சென்றன. ஹிரண்யன் பிறகு ப்ரஹ்லாதன் மேல் திக்கஜங்களை ஏவினான். கோவிந்த ஸ்மரணத்தில் தன்னை மறந்திருந்த ப்ரஹ்லாதனைக் கொல்ல அவைகளாலும் இயலவில்லை. பிறகு ''ஒரு பெருங்குழி தோண்டி அதில் விறகுகளை அடுக்கி நெய்யைச் சொரிந்து தீ மூட்டி இவனைக் கொளுத்துங்கள்'' என்றான். அஸுரர்கள் அவ்வாறே செய்தனர். அப்போது ப்ரஹ்லாதன்,

''போட்டளவி லெம்பெருமான் பொன்னடியே
தஞ்சமெனப் புகுந்த நம்பிக்
சீட்டளவில் பேரழலு மெண்ணலரும்
சந்த்ரரோ விமையோர் வாழும்
நாட்டினின்மந் தாகினியோ நந்தலையாா
நீர்மகளோ நளிர்பாற் சிந்ரோ
வாட்டமறு முனிவருளச் சீதளமோ
வைகுந்தத் தாரே யாதோ?''

''அகம் புகுந்த கோடியோர்க ளகன்ற கனற்
குழியிலேனை யழிக்க வேண்டிப்
புகவிடுங்கால் நின்னருளைப் பொழிந்தனையோ
குளிர்வழ்யைப் பொருந்தி ஞயோ
சகந்தொழுநின் தாள்மலரோ தனிச்சுகவீட்
டானந்த சலதி தானே
தகுந்தகுமென் றினிதாடி குளிர்ந்துமகிழ்ந்
திடப்புரிந்த தயைதானேய!''

[ஸ்ரீ பாத்ம புராணம், நரமடங்கலெழுந்த படலம்]

[என் ஐயனே! எம்பெருமான் பொன்னடியே தஞ்சமெனப் புகுந்த எனக்கு இத்தீ நிலவு போலும், கங்கை, நீலக்கடல், பாற்கடல் இவைகளினிடையே இருப்பதுபோலும், மாமுனிவர்களின் உள்ளம் போலும், விரஜா நதி போலும், எம்பெருமானது குளிர்ந்த சடாக்ஷம் போலும் அவனது திருவடித்தாமரை

போலும், ஸ்ரீவைகுண்டம் போலும் குளிர்ந்திருக்கின்றது] என்றான்.

இவை யனைத்தையும் பார்த்த குரு அஸுரேசனைத் துதித்து "உமது பாலன் விஷயத்தில் கோபங்கொள்ளாதீர். நாங்கள் உமது குமாரனை உமக்கு அநுகூலனாகும்படி தகுந்தபடி சிக்ஷிக்கிறோம். இது பால்யப் பருவமாதலால், அப் பருவத்துக் கேற்ற பிடிவாதம் இவனிடம் இருக்கலாம். நாங்கள் நல்ல வார்த்தை சொல்லியே இவனுடைய புத்தியை மாற்றுகிறோம். அப்படியும் இவன் ஹரியினிடம் விச்வாஸத்தை விடாமற்போனானாகில், இவனைப் பற்பல வகையில் வதைக்கிறோம்." என்றனர். அப்போது ஹிரண்யன் ப்ரஹ்லாதனை அக்நியினின்றும் அகற்றிக் குருக்கள் வீட்டுக் கனுப்பினான். அங்கே சண்டாமர்க்கர் தர்மார்த்த காமங்களைப்பற்றி உபதேசம் செய்தார்கள். அது ராகத்வேஷாதிகளையுண்டு பண்ணி விஷயேச்சையைத் தரவல்லதாதலால், அதை அவன் செவியிலும் ஏற்றானல்லன்.

சண்டாமர்க்கர் சிற்சில ஸமயங்களில் தங்கள் கார்யநிமித்தம் வெளிச்செல்வதுண்டு. அந்த ஸமயத்தில் அஸுரபாலர்கள் ப்ரஹ்லாதனை விளையாட அழைப்பார்கள். அப்போது தன்னுடன் விளையாடவரும் குழந்தைகளை அழைத்து மிகவும் அன்போடு சில விஷயங்களை உபதேசம் செய்வான். அவர்களும் அதை ஆவலோடு கேட்பார்கள். ஒரு நாள் ப்ரஹ்லாதன் பாலர்களைக் கூப்பிட்டு, "நண்பர்களே! இன்று உங்களிடம் சில விஷயம் சொல்லப்போகிறேன், அதை அவதானத்துடன் கூர்ந்து கேளுங்கள்" என்றான். அவர்களும் சொல்லெனச் சொல்ல, ப்ரஹ்லாதன் கூறுகிறான்.

"அரிதரிது மானிடராதலரிது" என்றபடி மானிடராய்ப் பிறத்தல் மிகவும் அரிது. அப் பிறவி கிடைத்தும், அது நிலைத்திருப்பதில்லை. மானிடனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும், 'இது செய்யத் தக்கது, இது செய்யத் தகாதது, என்பதைப் பகுத்தறிந்து, பகவானை யடைவதற்கு அநுகூலமாயிருக்கும் தர்மங்களை இளமை முதற்கொண்டே செய்து வரல் வேண்டும். இளமையும் நிலையுற்றதல்ல. அது நீரிற் குமிழி. இளமைக்குப் பிறகு யௌவநமும், அடுத்தபடி கிழத்தனமுமடைந்து, அப்பால் மரணமடைவது திண்ணம். மனிதரின் இந்த அவஸ்தைகளை ப்ரதிதினமும் கண்கூடாகக் கண்டுவருகிறோம். இது மாத்ரமல்ல. மரணமடைந்த பிறகு பிறவி முற்றுப் பெறுகிறதில்லை. மீண்டும் மற்றொரு பிறவி உண்டாகிறது. இப் பிறவிக்குக் காரணம் முற்பிறப்பிற் செய்த வினைகள் தாம். அவ்வினைகளின் பயனால் இவ்வுலகில் பிறந்திருக்கும் வேலைக்கு ஓய்வேயில்லை. கர்ப்பவாஸம் முதல் மரணம் வரையில், இளமை முதலிய எல்லாப்பருவங்களிலும் மனிதன் துக்கத்தையே அநுபவிக்கிறான்.

'அந்நபாநாதிகள் பசி தாஹங்களைத் தீர்க்கின்றன வென்றும், சரீரத்தின் சீதோஷ்ணாதிகளை அவை சமநம் பண்ணுகின்றன வென்றும், அக்காரணத்தைக்கொண்டு அவைகளை ஸுகமென்று நினைக்கிறான் மனிதன். அது தப்பிதம். இந்த அந்நபாநாதிகளை ஸம்பாதிப்பதற்கு ஒருவன் எடுத்துக்கொள்ளும் ப்ரயாஸமும் ச்ரமமும் சொல்லத்தரமா? இந்த அந்நம் முதலியவை ஜீரணிக்காமலிருந்தால், அவைகளால் உண்டாகும் நோயின் வருத்தந்தான் கொஞ்சமாயிருக்கிறதா? அப்போது அந்நமே ம்ருத்யுவாகிறதன்றோ? மற்றொன்று பாருங்கள்; உடல் பருத்த வாத சரீரமுள்ளவன் உடற்பிணியுற்ற காலத்துப் பிறரைக்கொண்டு தன்னைக் குத்தவும் மிதிக்கவும் சொல்கிறான். அப்போது அவை அவனுக்குப் போகத்தைத் தருகின்றன. ஸாதாரணமாகக் குத்துவதும் மிதிப்பதும் ஒருவனுக்குப் போகந்தரும் செயலாகுமா? இப்படியே காமமோஹிதனாயிருக்கு மொருவனுக்குக் காமிநியின் ஊடலில் அவளுடைய பாததாடநம் (காலுதை) முதலியனவும் போக்யமாக ஆகின்றன. ஆதலின் இவைகளைப் புத்திமயக்கத்தால் ஸுகமென்று நினைக்கிறோம். உண்மையில் இவை ஸுகங்களாகமாட்டா.

'மற்றும் கேளுங்கள். மனிதன் தன் மனத்திற்குப் பிடித்த தந்தை தாய், தமர், தாரம், மகவு, செல்வம் என்னு மிவைகளை

ஸம்பாதிக்கிறான். அவன் எவ்வளவுக்கெவ்வளவு இவைகளை ஸம்பாதிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவைகளால் மீட்சியில்லாத துக்கமே அவனுக்கு மிகுந்து காணப்படுகிறது. இதற்கு ஓர் உவமை கூறுகிறேன் கேளுங்கள். ஒருவிதப் பட்டுப்பூச்சி போன்ற புழுவானது தனக்குக் கூடுகட்டிக் கொள்கையில், தான் வெளியிலே வர வழிவைத்துக்கொள்ளாதபடி கூட்டைக்கட்டிக்கொண்டு அதனுள்ளேயே உழன்றுகொண்டிருக்குமாம். அதையொத்தது ஸம்ஸாரத்தில் ஆசை வைப்பது. மீட்சியே கிடையாது. உலகத்தில் மனிதன் தான் பாலனு யிருக்குங்காலத்தில், இந்த வாலிபப் பருவங்கடந்ததும் யௌவனப் பருவத்தில் ஆத்மாவுக்கு நன்மையைத் தேடிக்கொள்ளலாமென்றிருப்பன். யௌவநமடைந்ததும் இப்பொழுதென்ன அவஸரம்? கிழப் பருவத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்றிருப்பான். வயது முதிர்ந்து மூப்படைந்ததும், இந்த்ரியங்களுக்கு அப்போது பலக்குறைவு ஏற்படுமாதலால். மிகத்தளர்ந்து, 'இனி என் செய்வேன்! திடகாத்ரனுக இருக்கும்போதே ஆத்மஹிதம் செய்துகொள்ளாமல் மூடனய்ப்போனேனே!' என்று கழிவிரக்கங் கொள்வான். பாலர்களே! இந்தக் கதையைக் கேளுங்கள்.

கங்கையாற்றில் ஒரு வண்ணன் துணி தோய்த்துக்கொண்டிருந்தான். அங்கே செம்படவன் ஒருவன் இவன் அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். இவர்கள் இருவருக்கும் தாஹமுண்டாயிற்று. வண்ணன், "இந்த வஸ்த்ரம் தோய்த்தாகட்டும், பிறகு நீர் அருந்தலாம்' என்று தண்ணீர் குடிக்காமலே ஒவ்வொரு துணியையும் தோய்த்துக்கொண்டிருக்கிறான். செம்படவனும், இந்த மீன் பிடித்தாகட்டும், இந்தமீன்பிடித்தாகட்டும்' என்று தாகசாந்தி பண்ணிக்கொள்ளாமலே ஒவ்வொரு மீனைப் பிடித்துக்கொண்டிருக்கிறுனும். இவர்கள் கதைபோலிருக்கிறது முற்கூறிய மனுஷ்யன் கதை.

ஆதலால் சிறுவர்களே! காலத்தை வீணய்க் கழிக்காதீர்கள். இளமையிலேயே ஆத்மாவுக்கு ஹிதத்தைத் தேடிக்கொள்ளுங்கள். முற்கூறிய பால்ய யௌவநாதி அவஸ்தைகளெல்லாம் ஶரீரத்துக்கேயன்றி ஆத்மாவுக்கில்லை. விஷயங்களில் ஆசையுள்ளவர்க்குப் பகவத்க்ருபை கிடைக்காது. பற்றற்றவர்க்கே வீடு உறுவது திண்ணம். ஆகையால் ஆத்மாவுக்கு ஹிதத்தை உடனே தேடிக்கொள்ளுங்கள். நாராயணனை நெஞ்சினுல் நினையுங்கள். அவன் நாமத்தை வாயினுற் சொல்லுங்கள். கேஶவன் கீர்த்தியைக் காதினுற் கேளுங்கள். ஸர்வ பூதங்களிடத்தும் எம்பெருமான் எள்ளினுள் எண்ணெய்போல் அந்தர்யாமியாய் இருந்து வருகிறார். ஆதலின் உலகில் எல்லா ப்ராணிகளிடத்தும் அன்பு செய்யுங்கள். ஸகல பூதங்களையும் தன்னைப்போலவே அபேதமாகப் பாருங்கள். ஒருவரிடமும் பொறாமை கொள்ளாதீர்கள். வீண் பொறாமையினுல் ஒருவன் மற்றொருவனைப் பகைத்துத் தூஷித்தானுகில் 'ஐயோ! இவன் கெட்டுப்போகிறானே!' என்று அவனுக்காக இரக்கங்கொண்டு அவனுக்கு நற்புத்தி உண்டாகுமாறு பகவானை ப்ரார்த்தியுங்கள். அஸாரமான ஸம்ஸார மார்க்கத்தில் மீண்டும் பிறப்பைத் தரும் தேவ மநுஷ்யாதி ஶரீரங்களுக்குரிய ஸ்வர்க்காதி போகங்களையும் காம்ய பலன்களையும் விரும்பாதீர்கள். வீடுபேற்றுக் குரிய ப்ரபத்யாதி வ்யாபாரங்களை ஸ்ரீமந்நாராயணன் திருவடியிற் செய்யுங்கள். பழுத்த மரத்தின் அடியைச் சேர்ந்தவனுக்குப் பழம் கிடைப்பதில் ஐயமில்லைபோல மஹாகல்பக வ்ருக்ஷமாகிற மதுஸூதநனை அடைந்தவர்க்குமோக்ஷபலம் கிடைப்பதில் ஐயமில்லை' என்று பலவாறுகப் போதித்தான்.

இவ்விதம் ப்ரஹ்லாதன் தன் துணைவர்களுக்குப் போதித்து வருவதைக்கண்ட அஸுரர் பயந்து இச்செய்தியை ஹிரண்யாஸுரனுக்குத் தெரிவித்தனர். அஸுரேந்த்ரன் கோபங்கொண்டு தன்னிடமுள்ள சமயற்காரர்களை அழைத்து 'பாசகர்களே! என் குமாரன் ப்ரஹ்லாதன் தான் கெட்டதுமன்றி, தன்னைச் சார்ந்த மற்றையோரையும் கெடுக்கிறான். ஆகையால் இவனறியாமல் இவன் உண்ணும் உணவில் கொடிய நஞ்சைக் கலந்து கொடுத்து உண்பியுங்கள் இவன் சாகட்டும்' என்று கட்

டளையிட்டான். பாசகரும் அவ்வாறே செய்தனர். ப்ரஹ்லாதன் பகவந்நாமத்தை உச்சரித்துக்கொண்டே அதை அருந்தினன். அந் நாமப்ரபாவத்தால் அவ் விஷம் இவன் உடலில் ஜீர்ணமாகி, விஷத்தினல் உண்டாகும் வேறுபாடுகள் சிறிதுமின்றி விளங்கினன். இச்செய்தியை அஸுரர்கள் அரசனுக்கு அறிவிக்க, அவன் பின்னும் பொங்கி 'அஸுரர்காள்! பயங்கரமான ஒரு க்ருத்யையை (பெரும் பூதத்தை) உண்டாக்கி அதனைக்கொண்டு அவனைக் கொல்வியுங்கள்' என்றான். அப்போது அக் குருக்கள்மார் ப்ரஹ்லாதனைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்:—

'அப்பா! குழந்தாய்! உத்தமமான ப்ராஹ்மணகுலத்தில் பிறந்தாய். ஸுக்ருதத்தினல் அஸுரகுல திலகனன ஹிரண்யகசிபுவுக்குப் பிள்ளையாக ஆனாய். உனக்கு ஒரு குறைவும் இல்லை. அப்படியிருக்க எந்தத் தேவதையால் என்ன ஆகவேண்டியது உனக்கு? அந்த ஹரி உனக்கு என்னசெய்யக்கூடும்? உன்பிதா ஸகல லோகாதிபதி. அவர் சொற்படி நடந்துவந்தால் நீயும் அவரைப் போலவே ஸகல லோகாதிபதியாக இருக்கலாம். அந்த ஹரி என்பவன் நமக்கு ஜந்ம ஶத்ரு. எவனேனும் ஶத்ருவை ஸ்தோத்ரம் பண்ணுவானா? ஆதலின் அந்த ஹரியை மனத்திலும் நினைக்காமல் உன் தந்தையின் கட்டளையை நிறைவேற்று. அவர் வார்த்தையை மீறாதே. அவர் உனக்குப் பரம குருவன்றோ?' என்றார்கள்.

அதற்கு ப்ரஹ்லாதன் சொல்லுகிறான்:— 'மஹாத்மாக்களே! நீங்கள் சொல்லுவது யாவும் உண்மையே, ப்ராஹ்மணகுலம் உயர்ந்தது தான், என் பிதா உயர்ந்த சரித்ரத்துடன் கூடினவரென்பதையும், அவர் எனக்குப் பரம குருவென்பதையும் அறிவேன். அவர்விஷயத்தில் நான் மனமறிந்து அபசாரப்பட்டுக்கொண்டதில்லை. ஒன்றுமாத்ரம் கூறுவேன்:— 'அந்த ஹரியால் உனக்கு என்ன ஆகவேண்டியிருக்கிறது?' என்று சொன்னீர்களே, அதை நான் ஒப்பவே மாட்டேன். உலகில் தர்மார்த்த காம மோக்ஷங்கள் எனப்படும் நால்வகை புருஷார்த்தங்களும் அவனை அடைதலினாலேயே ஒருவனுக்குக் கிடைக்கின்றன. அநேகர் ஜ்ஞாநத்தாலும் த்யாநத்தாலும் யோகத்தாலும் அந்த ஹரியின் ஸ்வரூபத்தை உணர்ந்து ஸம்ஸார பந்தம் நீங்கப்பெற்று முக்தியடைந்தார்கள். அந்த ஹரியினுடைய ஆராதநமே ஜ்ஞாநம் ஐச்வர்யம் ஸந்தாநம் ஸம்பத்து இவற்றிற்குக் காரணமாயிருக்கிறது. மோக்ஷமென்பது அவருடைய ஆராதநம் ஒன்றினாலேயே ஸம்பாதிக்கத் தகுந்தது. இவ்வளவும் ஸ்ரீ ஹரியின் அருளினால் கிடைப்பதாயிருக்க 'அவனால் உனக்கு என்ன ப்ரயோஜநம்' என்று கேட்கிறீர்களே! உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லையே. ஸ்ரீமந் நாராயணனே ஜகத்துக்குக் கர்த்தா. அவனே அதை வளர்க்கிறவன். அவனே ஸம்ஹரிக்கிறவன். அவனே லோகநாதன்; எல்லாருடைய ஹ்ருதயத்திலு மிருந்துகொண்டு ஸகலத்தையும் அநுபவிக்கிறவனும் அவனே. அநுபவிக்கப்படுகிறவனும் அவனே. மற்றுமொரு விஷயம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்னும் முக்குணங்களும் அப்பெருமானுடையன; படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் அவனுடையன; ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரர் என்னும் த்ரி மூர்த்தி ஸ்வரூபங்களும் அவனுடையன. ஸூர்யன் சந்த்ரன் அக்நி என்னும் முச்சுடர்களும் அவனது கண்களாம்; ஸ்வர்கம் மத்யம் பாதாள மென்னும் மூன்றும் அவனது உலகங்களாம்; முதல் இடை கடை என்னும் மூன்று நிலைகளைக்கொண்ட எல்லாப் பொருள்கட்கும் அவனே ஸாக்ஷியாவான். இதுவே வேதாந்தத்தின் ஸித்தாந்தம்' என்றுசொல்லிமுடித்தான்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

புயலும் பொறுமையும்

[10-வது ஸம்புடம் 1-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உ.ப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M.A. வித்வான், L.T. திருவையாறு.]

வெள்ளேரியில் பார்த்தஸாரதி என்றொருவன் இருந்தான். பரம வ்ராத்யன். ஸ்நாநஸந்த்யாவந்தநங்கள் அவன் ஸ்வப்நத்திலும் கண்டவனல்ல. ஆங்கிலத்தில் கொஞ்சம் பீ. ஏ வகுப்புவரையில் எட்டிப்பார்த்தவன். நாஸ்திகநூல்களை ஏராளமாய் படித்தவன். வைதிக தத்வத்திலும் வைதிகர்களிடத்திலும் எல்லையற்ற வெறுப்புக் கொண்டவன். ப்ராஹ்மண குலத்தில் பிறந்து ஆங்கிலம்படித்த யுவர்கள் பலரைப்போல உத்யோகமும் ஆகப்பெறாமலிருந்தான். ஆறு குழந்தைகள். ஐந்துமைல் தூரத்திலுள்ள மையூரில் ஓர் ஆரம்ப பாடசாலை நடத்தி அதனால் கிடைக்கும் ஊதியத்தில் எப்படியோ காலக்ஷேபம் செய்துவந்தான். யதுநாதனிடம் என்னகாரணத்தாலோ எல்லையற்ற வெறுப்புக் கொண்டான். அவருடைய ஔதார்யமும், ப்ரிய வசநங்களும், விநயமும் அவன் நெஞ்சை வாட்டின. ‘அட்டைகள்! ஸமூகத்தின் உயிரை உறிஞ்சும் பேய்கள்! எங்கிருந்து இவர்களுக்குப் பணம்? ஏழைகளின் இரத்தம் சிந்தப்பெற்ற உழைப்பின் பயனால்வந்த ஸுயநலத்தின் விளைவல்லவா இவர்களின் பணம்; நாடு நன்மை அடையவேண்டுமானால் ஒழியவேண்டும் இந்த அட்டைக்கூட்டம்’ என்பான். இவனுக்குத் துணையாக இவனைப்போலவே புத்தி தடுமாறிய வேறுசில இளைஞர் ஊரில் உண்டு. ஏழ்மை கொடிய சோதனை; ஏழ்மை உயிரை அறுக்கும் வாள்; உடலை வாட்டும் பெரிய நோய்; நம்பிக்கையை அழிக்கும் யமன்; வளர்ச்சியைத் தடுக்கும் விஷம்; த்ருப்தியைத் தலைகாட்டச்செய்யாத கருவி; அத்ருப்தி, நாஸ்திக்யம், கொடுமை முதலியவற்றிற்கு விளைநிலம். பார்த்தஸாரதி உலகத்தையே வெறுத்தது ஆச்சர்யமா? மாதவாசார்யர் யதுநாதனிடம் நல்ல கருத்துடையவரல்ல என்று எண்ணி யதுநாதனிடம்உள்ள பொறுமையால் மாதவாசார்யருடன் உறவு கொண்டாடினான். ஒருநாள் க்ராமத்தில் பலர்சேர்ந்து மாதவாசார்யருடன் பேசிக்கொண்டிருந்தஸமயம் பார்த்தஸாரதி பேச ஆரம்பித்தான். வஞ்சகர்கள் பேசவாரம்பித்தால் பேச்சின் அழகு சொல்லவா வேண்டும்? அதில் வேதம் விளங்கும், புராணம் பொதிந்துகிடக்கும், உலக தத்வங்கள் ஒளிரும், பழமொழிகள் பரந்து காணும். பாம்பு படமெடுப்பதில் ஒரு அழகில்லையா? வெட்ட ஓங்கப்பெற்ற வாளின் ஒளியில் ஒரு அழகில்லையா? குற்றமற்ற மானின் உடலைப் பிளக்கத்தாவும் புலியின் கர்ஜநத்திலும் ஒரு ஆண்மை அழகில்லையா? அதுபோல ஸாது ஜநங்களை நலியும் பார்த்தஸாரதியின் பேச்சிலும் நயம் இருந்தது.

‘எப்படிப்பட்ட ஊர் எப்படிக் கெட்டுவிட்டது பாருங்கள்! உள்ளூரில் உள்ள ஸ்வர்ணத்தின் ஒளி குன்றி வெளியே கெட்டலைந்து திரும்பிய பித்தளை தன் மாய ஒளியைப் பரப்புகின்றது. மாதவாசார்ஸ்வாமிபோல்வார் அமெரிக்கா போன்ற நாட்டிற் பிறந்திருந்தால் இப்படியா ஒருவருமறியாமல் வாழ்வார்கள்; பலர் அண்டுவார்கள்; பத்ரிகைகளில் புகழைப் பாடுவார்கள்; பணத்தால் பண்படுத்துவார்கள் உலகறிய உரைப்பார்கள்; ஆண்டுவிழாச் செய்வார்கள்? வெள்ளிவிழா விரும்புவார்கள்; வேதநிதி என்பார்; விரும்பும் பொருள் என்பார்; நாட்டின் உயிர் என்பார்; நலத்தின் குவை என்பார். இத்தகைய பெரியோரை மறந்து நாம் கொண்டாடுவது ஒரு கபடாசாரியை. கநகத்தை விட்டுக் காக்கைப்பொன்னைக் கைப்பற்றினோம். கோல்கொண்டா வைரத்தைக் குப்பையில்விட்டுக் கண்ணாடித் துணுக்கைக் கொண்டாடிக் களிக்கிறோம். ஏன்? சிறிதளவு

பகுத்தறிவில்லாமல்தான்!'

ஒருவன் ஏன் பணத்தை வாரி இறைக்க வேண்டும்! ஏழைகளுக்கு நற்றுணைபோல் பாவிக்கவேண்டும்! பலர் உள்ளத்தை ஏமாற்றித் தன் வசப்படுத்துவது எதற்காக! பாலர்களின் உள்ளத்தைப் பறிப்பதும் எதற்காக! க்ராமத்தவர்களே சற்று யோசித்துப் பாருங்கள். பிறரிடம் மதிப்புப் பெறவேண்டுமென்ற பேராவா இருக்கிறதென்பது நன்கு தெரிகிறதல்லவா? ஏழைகளெல்லாம் ஸௌக்யமாயிருக்கவேண்டுமென்று அவருக்குத் தூக்கம் வரவில்லையா? தன் பணத்திமிரை வெளியே காட்டிக்கொண்டு ஏழைகளை 'நீங்களெல்லாம் என்போன்றவர்களுக்கு அடிமைகள்' என்று சொல்லிக்காட்டுவதுபோலிருக்கிறது. கோயிலைச் சீர்திருத்துவதும், ஏரிக்குப் படியமைப்பதும், பையன்களைப் படிப்பிப்பதும் ஏதோ பயங்கரமான மர்மபாசவே இருக்கிறது'.

'நண்பர்களே! நான் யாரைக் குறிக்கிறேனென்பது சொல்லாமலே தெரியும். அந்த மனுஷ்யன் ஓர் பெண்பிள்ளையின் துக்கத்தைத் தன் சுயநலத்திற்குத் துணையாகக்கொண்டு அவளிடம் இரவுபகல் நெருங்குவதும் பேசுவதும் .....' என்று சொல்லும்பொழுது மாதவாசார்யர் குறுக்கிட்டு 'பார்த்தஸாரதி! நிறுத்து! பரம நாஸ்திகனான உனக்கு தெய்வம், வேதம், வேதாசாரம், தர்மம், தானம் இவற்றில் நம்பிக்கையில்லை. 'அரசமரத்தைப் பிடித்த பிசாசு பிள்ளையாரையும் ஆட்டிவைத்ததாம்' என்ற பழமொழிப்படி உன்விஷயமான கொள்கைகளை எங்களிடம் ஏன் பரப்பவேண்டும்? ஊரிலுள்ள பெரியோர்களிடம் மிகவும் பற்றுள்ளவன்போல் பாவித்துப் பெரும் பாபமான பெரியோர் நிந்தையைக் கூசாது நீ கைக்கொள்ளும் ஆச்சர்யம் எனக்குப் புரியாத விஷயமல்ல. நீ நிந்தைசெய்பவர் ஓர் மஹான்' என்றார். யாவரும் ஆச்சர்யத்துடன் பார்த்தனர். வாஸ[illegible]கனைத்துக்கொண்டான். தாமு ஸ்வாமியின் வியப்பிற்கு அளவில்லை.

மாதவாச்சார் ஆரம்பித்தார்:—

'க்ராமவாஸிகளே! யதுநாதன் நமக்குக் கிட்டற்கரிய சிந்தாமணி, குணநிதி, ஸாத்விக வடிவம், ஸர்வேச்வரனது திவ்யமங்கள விக்ரஹத்தை அர்ச்சையிலும் நடமாடும் மக்களிடத்தும் பார்ப்பவர், 'மாதவம் தேபி ஸேவந்தே யே ஸேவந்தே மஹாஜநம்' என்ற புராண வாக்யம் அவருக்கே தகும். அவரிடம் நான் பொறாமை கொண்டதுபோல் காட்டியதெல்லாம் அவருடைய நலத்திற்கும் நம் க்ராமத்தின் நலத்திற்குமே. பகவத்கைங்கர்யத்தில் ஈடுபட்டவனுக்கும் எல்லையில்லாத சர்வப்வந்து குலைக்கப் பார்க்கும். காமம் புகுவதற்கு அவகாசம் நோக்கும். க்ரோதம் கைப்பற்ற குதூஹலிக்கும். பாபங்கள் அவனைக்குலைக்கப் பாரிக்கும். இதற்காகவே அவருடைய திட்பத்தைச் சோதிப்பதற்காகவே இத்தனைநாட்கள் அவரை வைவதுபோலும் கடிவதுபோலும் பாவனை செய்துவந்தேன். அவரது பொறுமையைக் குலைக்கும் செயல்களைச் செய்து பார்த்தேன். பொன் உரைக்கல்லில் தேயத்தேயப் புத்தொளிபெற்று மிளிர்வதுபோல் அவரை ஒரு அகார்யம் செய்யும்படிச்செய்ய என்னால் முடியவில்லை. லௌகிகராயினும் ஸதாசார்ய கோஷ்டியில்இடம்பெற அருகதை பெற்றவர்.

பார்த்தஸாரதி! நாய் ஸிம்ஹத்தை அண்டுவதுபோல் நீ அவரைத் தீண்டாதே. உன் கட்டுரைகளெல்லாம் அவர்முன்பு சந்த்ரன் முன்னர் 'நாய் குரைத்தற்று'! பெரிய ஆலவ்ருக்ஷத்தைப் பருக்கைக்கல்லால் அடித்துக் குலைக்க விரும்புகிறாய். மலையைப் புல்துரும்புகொண்டு பெயர்க்க விரும்புகிறாய். உன்னை யாருடைய சொல்லிலும் சீற்றங்கொள்ளாத செல்வன் அவரே' என்று சொல்லும்பொழுது யதுநாதன் அந்தவழியே வந்தார். மாதவாசார்யர் ஓடி அவரைக் காடாலிங்கநம் செய்துகொண்டார். யதுநாதன் திகைத்துப்போய் மாதவாசார்யரை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். மாதவாசார்யரும் ப்ரதிப்ரணாமம் செய்ததைக்கண்டு யாவரும் 'இது பூலோகமோ வைகுண்டமோ' என்று வியந்தனர். பார்த்தஸாரதி நழுவினான். சோட்டானுக்குப் பகலில் ஏது சக்தி? ஆந்தைக்குச் சூர்யனைப்பார்க்க ஆற்றலுண்டா? புண்யத்தின்முன் பாபத்திற்கு என்ன நிலை உண்டு? 'பிரிந்தவர் கூடினால் பேசவும் போகுமோ' என்றபடி ஆரத் தழுவிய யதுநாதனும் மாதவாசார்யரும் ஸ்ரீவைஷ்ணவனது ஸ்வரூபத்தை விளக்கினார்கள்.

[தொடரும்]

ஸ்ரீ:

[illegible]

ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிற

ஸதாசாரம்

[ஸ்ரீ அஹோபில மடம், ஆஸ்தாந வித்வான்,
ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

[illegible]

தேவதைகள், பசுக்கள், பிராஹ்மணர்கள், மந்த்ரஜபம் செய்து ஸித்திபெற்றவர்கள், வயதாலும் ஜ்ஞாநத்தாலும் பெரியோர்கள், ஆசார்யர்கள், இவர்கள் எல்லோரையும் முறைதப்பாமல் பூஜிக்கவேண்டும்.

[illegible]

அந்தந்த ஜாதிக்குத் தகுந்தபடியும் அந்தந்த ஆச்ரமத்திற்குத் தகுந்தபடியும் மூன்று காலத்திலும் ஸந்த்யாவந்தநம் ப்ரீதியோடு தவறாமல் செய்யவேண்டும்.

[illegible]

ப்ரஹ்மசாரி ஸமிதாதாநம் செய்யவேண்டும். கல்யாணமானவர்கள் ஔபாஸநம் முதலியது செய்யவேண்டும். (ஸந்யாஸிகள் அக்நியில் ஹோமம் முதலான கார்யங்களைச்செய்யக்கூடாது; ஸமாச்ரயணம் பண்ணுவதற்காக சங்கு சக்ரத்தை அக்நியில் காய்ச்சலாம்.)

[illegible]

பரிசுத்தமான வஸ்த்ரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும். நல்ல புத்தியை உண்டுபண்ணக்கூடிய துளஸி, விஷ்ணுக்ராந்தி முதலான மூலிகைகளை காது முதலான இடங்களில் வைத்துக்கொள்ளவேண்டும். கருடப்பச்சை முதலிய ரத்நங்களை அணிந்துக்கொள்ளவேண்டும்.

[illegible]

தலைமயிரை நாற்றமில்லாமலும், அழுக்கு முதலியது இல்லாமலும், சுத்தமாகவும் வைத்துக்கொள்ளவேண்டும்.

[illegible]

நல்ல அலங்காரம் பண்ணிக்கொண்டு இருக்கிற பிள்ளையைப் பார்த்து தகப்பன் ஸந்தோஷிப்பதுபோல் நமக்கெல்லாம் தகப்பனான கடவுள் நம்மைப் பார்த்து ஸந்தோஷிக்கும்படியான நல்ல அலங்காரத்தோடிருக்கவேண்டும்.

[illegible]

வாஸனையுள்ளதுகளாயும், வெளுப்பாயுமிருக்கிற புஷ்பங்களை சூட்டிக்கொள்ளவேண்டும்.

[illegible]

எந்த கஷ்டங்கள் வந்தாலும் பிறர்களுடைய சொத்துக்களை அபஹரிக்கக்கூடாது.

[illegible]

யாருக்கும் ப்ரியமில்லாத வார்த்தைகளைச் சொல்லக்கூடாது.

[illegible]

ப்ரியமாகச் சொல்லுகிறதாக யிருந்தாலும் பொய் சொல்லக்கூடாது.

[illegible]

பிறர்களுடைய தோஷங்களைச் சொல்லக்கூடாது.

[illegible]

பிறர்களுடைய மனைவிகளை அநுபவிக்க நினைக்கக்கூடாது.

[illegible]

யாரோடும் கலஹத்தை விரும்பக்கூடாது.

[illegible]

முரட்டுக் குதிரை முதலியதுகளில் ஏறி ஸவாரி செய்யாதே.

[illegible]

அபாயம் வரக்கூடிய கரைகள் ஓரத்திலுள்ள மரத்து நிழல்களிலும் வெள்ளத்தினால் அறுக்கப்பட்ட கரைகளின் நிழலிலேயும் தங்காதே.

விஶிஷ்ட வதித உந்த வஷாஶெவொ ஊதிகீடக ஸுநகீ வயஶ்கீ ஹதஶ்ரு க்ஷாஊரு ஊநுதகஷ- ஊதிஷ்யடஶீஷ- வஶிவாஷாத- ஶஶெ: ஜைத்ரீம் ந கூயடாக—

தீராத த்வேஷத்தை உடையவன் எந்த ஜாதீயரோடும் சேராத பெரிய பாபங்களைப் பண்ணினவன், தன்னை அறியாமல் மதம் கொண்டு பேசுகிறவன், அநேகம்பேர்களிடத்தில் த்ரோதம் உள்ளவன், செல்லுபோல் அரிக்கிற தரித்ரன், எந்த வழியிலாவது கட்டுப்படுத்தி புருஷர்களை கெடுக்கிறவள், குலங்களை அழிக்கிறவள், இவர்களுக்கு பர்த்தாவாக இருக்கிறவன், எந்த வரம்புக்கும் கட்டுப்படாதவன், பொய்யான விஷயங்களையே சொல்லி ஆடம்பரம் செய்கிறவன், வரவு செலவு யோசிக்காமல் எல்லையை மீறிச் செலவு செய்கிறவன், இதரர்களை எப்பொழுதும் தாழ்த்திப் பேசுகிறவன், மறைமுகமாக இருந்து கெடுதல் செய்பவன் முதலானவர்களோடு ஒருக்காலும் ஸ்நேஹம் வைத்துக்கொள்ளக் கூடாது.

வஜ்ஞாதஂ வநுாஂ ந வுஜெக—

முன்பின் அறியாத வழிகளில் ஒருவனைப் பேசக்கூடாது.

ஜஸாவஸூ ஶீஷ்ரெ நாவமாஹெக—

புதியதாக வந்துகொண்டிருக்கும் வேமான ஜலத்தில் ஸ்நாநம் செய்யக்கூடாது.

தீவஂ வெஶ்ஂ ந விஶெக—

எரிந்துகொண்டு இருக்கும் வீட்டிற்குள் நுழையக்கூடாது.

தஶோ: ஶிவஂ நாஶோஹெக—

மரத்தினுடைய நுனிக்கிளைகளில் ஏறக் கூடாது.

ஷதெஷஜஷ்டஂ ந கூயடாக—

அடிக்கடி பற்களை கடிக்கக்கூடாது.

நாஸிகாஂ ந குஷீயாக—

மூக்கை அடிக்கடி திருகிக்கொள்ளக்கூடாது; நோண்டக்கூடாது.

ஊஸஂவுதஶூவா ந ஜூஂஹெக—

வாயை மூடிக்கொள்ளாமல் கொட்டாவி விடக்கூடாது.

ஶாஸஂவாஸஂ ந விஸூஜெக—

வாயை மூடிக்கொள்ளாமல் மூச்சுவிடக் கூடாது மூச்சு இழுக்கவும் கூடாது.

உஶெவு நஷ் ஹஸெக—

உரக்க சிரிக்கக்கூடாது.

ஸஶஷூஂ வவநஂ ந ஊஂஶெக—

கூட்டங்களில் சப்தத்தோடு வாயு பிரியக் கூடாது.

நவாநு ந வாஷெயெக—

பற்களில் நகத்தை வைத்துக் கடிக்கக்கூடாது.

தூணஂ நவிநூாக—

வ்யர்த்தமாகத் துரும்புகளைக் கிள்ளிப் போடக்கூடாது.

ஊஹீஂ ந விஶெக—

நகங்களால் பூமியைக் கீறக்கூடாது.

ஶஶ்ரூஂ ந ஹக்ஷயெக—

மீசையை நாக்கினல் நக்கி உதட்டில் வைத்துக் கடிக்கக்கூடாது.

ஶோஷஂ ந ஊஂஜீயாக—

வ்யர்த்தமாக ஓட்டாஞ்சல்லியை உடைக்கக் கூடாது.

ஊஶெஸூஶஸூஷாநி ஜ்யோதீஂஷி நாவெக்ஷெத

அசுத்தமான குப்பை முதலான இடங்களில் எறிந்துக்கொண்டிருக்கும் நெருப்புகளை அதிகநாழிகை பார்க்கக்கூடாது.

விழுகிற நக்ஷத்ரம் அரைகுறைச் சந்த்ரன் முதலான தேஜஸ்ஸுகளையும் பார்க்காதே.

நஜ்நாஂ வஶஸ்தீயஂ உஷயாஸூஶெ ஸூஶியஂ வ நாவெக்ஷெத—

துணிஉடுத்திக்கொள்ளாமல் இருக்கும் ஸமயத்தில் இதரர்களுடைய ஸ்த்ரீகளை பார்ப்பது தவறு. உதயகாலத்திலும் அஸ்தமனகாலத்திலும் ஸூர்யனை பார்ப்பது சாஸ்த்ர விரோதமாகும்.

ஶவஂ ஶவஶஷஂ வ ந ஹஷஂகூஶுயுக—

சவத்தைப் பார்த்தும், அதை சாஸ்த்ரப்படி கொளுத்துகிற ஸமயத்தில் அதிலிருந்து உண்டாகும் வாஸனையைக்கண்டும் ஜுகுப்ஸையைப் படக்கூடாது.

வதஷ்ஷயஂ வைதூஶஂ ஶூஶாநாவநாநி ஊஷ்ஷ வூஷஸஂகுஷ்டஂ வ நிஶி ஸவஷா வஜயெக—

நாற்சந்தியிலும், மேடைகட்டி பூஜிக்கிற மரத்தின் கீழும், சுடுகாடு ஸமீபத்திலுள்ள

தோட்டங்களிலும் துஷ்டஸ்திரீகளுடைய அருகிலும் ராத்ரிவேளைகளில் அடியோடு தங்கலாகாது.

[illegible]

பெரியோர்கள் ப்ராஹ்மணர்கள் தேவதைகள் இவர்களுடைய நிழலை தாண்டலாகாது.

[illegible]

ஜனஸஞ்சாரமில்லாத காட்டுக்குள் ஒருவனாக போகலாகாது.

[illegible]

வெகு நாட்களாக குடியில்லாத வீட்டுக்குள் தனியாக இருக்கலாகாது.

[illegible]

மயிர்கள், எலும்புகள் முட்கள் நிறைந்த இடம் மலமூத்ராதியினால் அசுத்தமான பூமி பலிவைத்திருக்கும் இடம் சாம்பல் உமி இவைகள் கொட்டியிருக்கும் இடம் ஸ்நானம் செய்து நினைந்திருக்கும் பூமி இவைகளை தாண்டவும் மிதிக்கவும் கூடாது.

[illegible]

அயோக்யன் என்று தெரிந்துவிட்டால் எதற்காகவும் அவனை அண்டக்கூடாது.

[illegible]

கெட்ட ஸ்வபாவத்தை வைத்துக்கொள்ளக் கூடாது.

[illegible]

துஷ்டயானைகள் பாம்புகள் இவைகள் ஸமீபத்தில் போகலாகாது.

[illegible]

யானைகளின் எதிரிலும் பாம்புகளின் அருகிலும் அதிக நாழி நிற்கலாகாது.

[illegible]

அதிகமாக விழித்துக்கொண்டும் தூங்கிக்கொண்டும் இருக்கலாகாது. ஒரே இடத்தில் ஒரே ஆஸனத்தில் வெகு நாழிகை உட்கார்ந்து கொண்டும், எப்பொழுதும் படுத்துக்கொண்டிருப்பதும், பலம் உண்டாவதற்காக அதிக தேகப்பயிற்சி செய்வதும் கூடாது.

[illegible]

நிறைய பற்கள் கொம்புகள் உள்ள ம்ருகங்களின் ஸமீபத்தில் செல்லலாகாது.

[illegible]

நல்ல பனியில் நிற்கலாகாது. எதிர்காற்று எதிர் வெய்யில் இரண்டிலும் போகலாகாது.

[illegible]

வஸ்த்ரமில்லாமல் குளிக்கவோ தூங்கவோ ஆசமனம் செய்யவோ கூடாது.

[illegible]

கச்சமில்லாமல் ஆசமனம் செய்யக்கூடாது.

[illegible]

க்ருஹஸ்தன் வேஷ்டியை மாத்ரம் தரித்துக்கொண்டு உத்தரீயம் இல்லாமல் ஹோமமோ அர்ச்சனையோ ப்ராஹ்மண பூஜையோ ஜபம் முதலியதுகளை செய்யலாகாது.

[illegible]

கெட்ட நடவடிக்கை உள்ளவர்களோடு பழகலாகாது.

[illegible]

நல்ல சீலமுள்ளவர்களோடு பழகவேண்டும்.

[illegible]

தனக்கு மேல்பட்டவர்களோடும் கீழ்ப்பட்டவர்களிடத்திலும விரோதிக்கலாகாது.

[illegible]

விவாஹமோ விவாதமோ தனக்குச்சமமாக இருப்பவர்களோடு இருந்தால் கெடுதல்வராது.

[illegible]

வியர்த்தமான நீடித்த வைரத்தை விடவேண்டும்.

[illegible]

மிகவும் கொஞ்சமான நஷ்டங்களை பொறுத்துக்கொள்ளவேண்டும். அதற்காக சோபப்படலாகாது.

[illegible]

விரோதத்தினால் பணம் ஸம்பாதிப்பதை விடவேண்டும்.

[illegible]

ஸ்நானம் செய்துவிட்டு அந்த ஸ்நான ஸமயத்தில் இடுப்பில் கட்டிக்கொண்டிருக்கும் வஸ்

திரத்திஞல் உடம்பு தலே முதலியதுகளை துடைத்துக்கொள்ளக்கூடாது.

கைகளாலும் ஸ்நாந ஜலத்தை வழித்துத் துடைக்சக்கூடாது.

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍 𑌨 𑌨𑌿𑌰𑍍𑌧𑍁𑌨𑍁𑌯𑌾𑌤𑍍—

தலே மயிர்களை உதரலாகாது.

𑌉𑌤𑍍𑌥𑌿𑌤𑌃 𑌨𑌾𑌚𑌾𑌮𑍇𑌤𑍍—

நின்றுகொண்டு ஆசமனம் செய்யலாகாது.

𑌪𑌾𑌦𑍇𑌨 𑌪𑌾𑌦𑌂 𑌨𑌾𑌕𑍍𑌰𑌾𑌮𑍇𑌤𑍍—

காலால் காலே தேய்க்சக்கூடாது.

𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌨 𑌨𑌯𑍇𑌤𑍍—

பெரியோர்களுக்குமுன் கால்களை நீட்டலாகாது.

𑌗𑍁𑌰𑍋𑌰𑌗𑍍𑌰𑍇 𑌨𑍀𑌚𑌾𑌸𑌨𑌂 𑌭𑌜𑍇𑌤𑍍—

ஆசார்யர்களுக்கு எதிரில் தாழ்ந்த இடத்தில் நிற்கவேண்டும்.

𑌦𑍇𑌵𑌾𑌲𑌯 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌥 𑌮𑌙𑍍𑌗𑌲𑍍𑌯 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌅𑌪𑌸𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍—

கோயில் நாற்சந்தி மங்களவஸ்துக்கள் பெரியோர்கள் முதலிய இடங்களை ப்ரதக்ஷிணமாக போசவேண்டும்.

𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌨 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍—

அயோக்யன் பதிதன் அமங்களத்ரவ்யம் முதலியவர்களை ப்ரதக்ஷிணமாகபோகக்கூடாது

𑌸𑍋𑌮𑌾𑌰𑍍𑌕𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌮𑍍𑌬𑍁𑌵𑌾𑌯𑍂𑌨𑌾𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑍍𑌮𑍁𑌖𑍇 𑌨𑌿𑌷𑍍𑌠𑍀𑌵𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑍇 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍—

சந்த்ரன், ஸூர்யன் ஜலம், அக்நி, வாயு, பெரியோர்கள் இவர்களுக்கு எதிரில் காரி உமியக்கூடாது. மலமூத்ரவிஸர்ஜனம் செய்யலாகாது.

𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌨 𑌮𑍂𑌤𑍍𑌰𑌯𑍇𑌤𑍍—

நின்றுகொண்டு மூத்ரம் விடக்கூடாது.

𑌪𑌨𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑍈𑌵 𑌮𑍂𑌤𑍍𑌰𑌯𑍇𑌤𑍍—

நல்லவழிகளில் மலஜலம் கழிப்பது கூடாது.

𑌶𑍍𑌲𑍇𑌷𑍍𑌮𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑌾𑌕𑍍𑌰𑌮𑍇𑌤𑍍—

கோழை மலமூத்ரம் முதலியதுகளை தாண்டக்கூடாது

𑌭𑍋𑌜𑌨 𑌹𑍋𑌮𑌜𑌪 𑌅𑌰𑍍𑌚𑌨 𑌵𑍃𑌦𑍍𑌧𑌪𑍂𑌜𑌾𑌵𑌸𑌰𑍇𑌷𑍁 𑌶𑍍𑌲𑍇𑌷𑍍𑌮𑌸𑌿𑌙𑍍𑌘𑌾𑌣𑌕𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤—

சாப்பிடுகிறகாலம் ஹோமம் செய்கிற ஸமயம் அர்ச்சனை செய்கிற காலம் பெரியோர்களை பூஜிக்கிற ஸமயம் முதலியதுகளில் கோழை உமியக்கூடாது. மூக்கு சிந்தலாகாது.

𑌯𑍋𑌷𑌿𑌤𑍋 𑌨𑌾𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌤—

ஸ்திரீகளை அவமதிக்கலாகாது,

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍇𑌤𑍍—

ஸ்திரீகளிட்த்தில் அதிகநம்பிக்கை வைக்கலாகாது.

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌈𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍—

ஸ்திரீகளிடத்தில் பொருமைப்படலாகாது.

𑌤𑌾𑌃 𑌤𑌾𑌡𑌯𑌿𑌤𑍁𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍—

அவர்களை அடிக்கடி அதட்டலாகாது.

𑌆𑌦𑌰𑍍𑌶𑌹𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌨𑌭𑌿𑌵𑌾𑌦𑍍𑌯 𑌬𑌹𑌿𑌰𑍍𑌨 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍—

கண்ணுடி மஞ்சள் புஷ்பம் ரத்னம் முதலியதுகளைப்பார்க்காமலும் பெரியோர்களை வணங்காமலும் எந்த நல்ல கார்யங்களுக்கும் வீட்டைவிட்டு புறப்படலாகாது.

𑌸𑌾𑌧𑍂𑌨𑍍 𑌦𑍀𑌨𑌾𑌨𑍍 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌤𑍍—

ஸாதுக்களான ஏழைகளை கைதூக்கிவிடவேண்டும்.

𑌬𑌹𑍁𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌨𑍍 𑌉𑌪𑌾𑌸𑍀𑌤—

அநேக விஷயங்களை தெரிந்துகொண்டிருக்கிற பெரியோர்களிடத்தில் அடிக்கடி பழகவேண்டும்.

𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑌿𑌪𑌿𑌤𑍃𑌜𑌨𑌾𑌨𑍍 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌤𑌿𑌥𑍀𑌂𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌹𑌸𑍍𑌤𑌗𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍—

தேவ ரிஷி முதியோர்களை பூஜிக்கவேண்டும். பித்ருக்களுக்கு பிண்டம் தர்பணம் முதலியன செய்யவேண்டும். அதிதிகளை த்ருப்தி செய்து வைக்கவேண்டும். இம்மாதிரி செய்கிறவனுக்கு ஸ்வர்க்கம் கைமேல் இருக்கிறது.

𑌹𑌿𑌤𑌂 𑌮𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌕𑌾𑌲𑍇 𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌾𑌷𑍇𑌤—

அந்த காலங்களில் பொறுமையோடு கொஞ்சமாகவும் ப்ரியமாகவும் ஹிதமாகவும் பேசவேண்டும்.

𑌅𑌕𑌾𑌲𑌗𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌦𑌿𑌷𑍁 𑌪𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌶𑍌𑌚𑍇 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌂 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍—

அகாலத்தில் மேகம் இடிக்கின்ற ஸமயத்திலும், பர்வங்களிலும், தீட்டிலும் அத்யயநம் பண்ணக்கூடாது.

𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑍍 𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌨𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍—

சோபமுள்ளவர்களை ஸமாதானப்படுத்த

வேண்டும்.

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌬𑌨𑍍𑌧𑍁𑌵𑌦𑍍𑌭𑌵—

எல்லோருக்கும் பந்துக்கள்போல் இருக்க வேண்டும்.

𑌅𑌮𑌤𑍍𑌸𑌰𑍀 𑌭𑌵—

பொருமை இல்லாதவனாக இருக்கவேண்டும்.

𑌭𑍀𑌤𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌨𑌕𑌰𑌃 𑌭𑌵—

பயந்தவர்களுக்கு ஸமாதனம் சொல்லி தைர்யத்தை உண்டுபண்ணவேண்டும்.

𑌵𑌰𑍍𑌷𑌾𑌤𑌪𑌾𑌦𑌿𑌕𑍇 𑌛𑌤𑍍𑌰𑍀 𑌭𑌵—

மழை வெய்யில் முதலியதுகளில் குடை பிடித்துக்கொள்ளவேண்டும்.

𑌅𑌟𑌵𑍀𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌚 𑌦𑌣𑍍𑌡𑍀 𑌭𑌵—

காடுகளில் போகும்போதும் ராத்ரிவேளைகளில் போகும்போதும் கையில் கோலோடு போகவேண்டும்.

𑌸𑍋𑌪𑌾𑌨𑌤𑍍𑌕𑌃 𑌸𑌦𑌾 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍—

காலுக்கு ஏதாவது போட்டுக்கொண்டு வெளியில் ஸஞ்சரிக்கவேண்டும்.

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍 𑌚 𑌦𑍂𑌰𑌂 𑌵𑌾 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌨𑍍 𑌨 𑌪𑌰𑍍𑌯𑌟𑍇𑌤𑍍—

உயரமும் பக்கங்களிலும் வெகு தூரத்திலும் பார்த்துக்கொண்டு நடக்கக்கூடாது.

𑌯𑍁𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌲𑍋𑌕𑌯𑌨𑍍 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍—

ஒரு நுகத்தடிதூரம் முன்னால் பார்த்துக்கொண்டே நடக்கவேண்டும்.

𑌦𑍋𑌷𑌹𑍇𑌤𑍂𑌨𑍍 𑌨𑌿𑌰𑌸𑍍𑌯𑍇𑌤𑍍—

கெடுதல் உண்டாவதற்கு காரணமாக இருக்கிற வஸ்துக்களை தள்ளவேண்டும்.

𑌪𑌾𑌪𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍—

நமக்கு கெடுதல் செய்கிறவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு நாம் நல்ல கார்யங்களைச் செய்யவேண்டும்.

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌦𑍇𑌤𑍍—

ஸத்யத்தையே சொல்லவேண்டும்.

𑌪𑌰𑌪𑍀𑌡𑌾𑌕𑌰𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌨 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍—

இதரர்களுக்குக் கெடுதல் வரக்கூடியதான ஸத்யம் சொல்லக்கூடாது.

𑌅𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌪𑌿 𑌹𑌿𑌤𑌂 𑌵𑌦𑍇𑌤𑍍—

கேழ்க்கிறவனுக்கு அப்ரியமாக இருந்தாலும் அவனுக்கு க்ஷேமம் உண்டாகக்கூடிய ஹிதமான விஷயங்களை தாக்ஷிண்யம் பாராமல் சொல்ல வேண்டும்.

𑌏𑌵𑌂 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌵𑌾𑌨𑍍 𑌇𑌹 𑌕𑍍𑌷𑍇𑌮𑍀 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇 𑌚 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇—

இம்மாதிரியான ஸதாசார முடையவன் இந்த லோகத்திலும் க்ஷேமத்தை அடைந்து ஸ்வர்கத்திலும் ஆநந்திக்கிருன்.

இந்த ஸதாசாரத்தில் சொல்லியிருக்கும் விஷயங்களை நன்ருக யோசித்துப்பார்த்தால் யாரும் சொல்லாமலே செடுதல்களையும் நல்லதுகளையும் தெரிந்துகொள்ளலாம்.

சுகாதாரப்படி வ்யாதிகள் வருமல் இருப்பதற்கும் இவ்விடத்தில் கலஹங்கள் உண்டாகாமல் இருப்பதற்கும் தேஹரக்ஷணத்திற்கும் நரகம் நணுகாமலிருப்பதற்கும் நல்லுலகங்களில் ஆநந்தம் அநுபவிப்பதற்கும் உபயோகப்படுகிறது என்று சொல்லலாம். புத்திசாலிகள் தெரிந்துகொள்ளலாம். மிகவும் தெரிந்தவர்களுக்காக இதை எழுதவில்லை. பொழுது போக்குவதற்காகவும் எழுதவில்லை யாருக்காவது இது உபயோகப்பட்டால் பகவான் இந்த ஸதாசாரத்தை நடத்துகிறவர்களிடத்தில் எவ்வளவு அன்பு வைப்பானே அவ்வளவு அன்பு நம்மிடத்திலும் வைப்பான் என்று இதை எழுதினேன்.

இதைப்போல் வேறு சிலவிஷயங்கள் அடுத்தஸஞ்சிகையில் வரும் க்ஷமிக்கவும்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

காஞ்சி கருடோத்ஸவம்

(கோபுரவாசல் ஸேவை)

[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வோகேட், சென்னை.]

ப்ரத்யூஷே வரத: ப்ரஸந்நவதந: ப்ராப்தாபிமுக்யாந் ஜநாந்
ஆபத்தாஞ்ஜலி மஸ்தகாந் அவிரளாந் ஆபாலமாநந்தயந் I
மந்தோட்டாமரசாமரோ மணிமய: ச்வேதாதபத்ர: சநை:
அந்தர் கோபுர மாவிராஸ பகவான் ஆரூட பக்ஷீச்வர: II

காஞ்சீபுரம் ஸ்ரீ தேவாதிராஜன் கருடோத்ஸவத்தன்று அதிகாலையில் கோபுரவாசலில் அவ்வமரர் பெருமான் அளிக்கும் காட்சியைக் குறித்து தொட்டையாசார்ய ஸ்வாமி என்ற ஒரு மஹான் மங்களாசாஸநம் செய்தருளிய ச்லோகம் இது. பல நூற்றாண்டுகளுக்குமுன் அம் மஹா புருஷனது அநுபவத்துக்கு விஷயமாகிய அந்த திவ்யஸேவை இன்றளவும் அஸ்மதாதிகளுக்கும்கூடக் காணக்கிடைக்கின்றது. அதன் பெருமை நேரில் பார்த்து ஒரு படி உணரப்பட வேண்டியதொன்றேயன்றி சொல்லினால் சொல்லப்படுமதன்று.

ஸ்ரீ பேரருளாளனது வைசாக ப்ரஹ்மோத்ஸவத்தில் மூன்றாம் உத்ஸவம் கருடோத்ஸவம். இரண்டாம் உத்ஸவம் இரவு ஸுமார் 2 மணிக்கெல்லாம் எம்பெருமான் உள்ளேயிருந்து வாஹநமண்டபத்துக் கெழுந்தருளுவார். ஸுமார் 4 மணிக்கு வாஹநமண்டபத்தில் திரை நீக்கப்பட்டு கோவிலுக்குள் திரண்டு வந்திருக்கும் அடியார் குழாங்களுக்கு அத்புத ஸேவை ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருப்பான் ப்ரபு. பின்மாலை 4-30 அல்லது 4-45க்குப் புறப்பாடு ஆகும். வெகு உத்ஸாஹத்துடன் ஸ்ரீபாதம் தாங்குவோர் குலுக்கிக் குலுக்கி எழுந்தருளப்பண்ணும்போது எம்பெருமான் தம் மீது ஆரோஹணித்த ஆநந்தத்தால் பெரிய திருவடி தமது பக்ஷங்களை அசக்கிக்கொண்டு உயரக் கிளம்புவதாகக் காணுமேயன்றி வாஹநத்தில் ஓர் அர்ச்சாமூர்த்தியின் புறப்பாடு ஆகிறது என்றே தோன்றாது. அந்தப் புறப்பாட்டுக்கு அறிகுறியாக அடுக்கு வெடிகளும் அன்பர்களின் ஆரவாரிப்பும் அமரலோகத்தளவும் சென்றிசைப்பன. வாஹந மண்டபத்தைவிட்டு வெளியே எழுந்தருளி வெண்மைக்கும் வைசால்யத்துக்கும் பாற்கடலுக் கொப்பிடக்கூடிய ஒரு பெரிய குடையை சாற்றிக்கொண்டு அன்பரிட்டங்கள் திருப்பல்லாண்டு அநுஸந்திக்க நேராக ஆழ்வார் திருவீதி (உட்ப்ரதக்ஷிணம்) யில் எழுந்தருளுவார். "அருளாழிப்புட்கடவீர் அவர் வீதி ஒருநாள்" என்று ஆழ்வார் அலற்றியமை செவிப்பட்டு ஓடோடியும் வந்து அவர் வீதியில் எழுந்தருளுகிறார் என்றே தோன்றும், அங்கே எழுந்தருளும் த்வரையைக் காண. ஆழ்வார் ஸந்நிதிக்கெதிரில் ஆழ்வாருக்கு அபிமுகமாக நின்று அவருக்குத் திருமாலை ஸ்ரீசடாரி மரியாதைகள் நடைபெறும். அங்கிருந்துபுறப்பட்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி ஸ்ரீபாஷ்யகாரர் ஸந்நிதியின் வாசலில் மறுபடி சற்றே தயங்கிநிற்பர் தேவாதிராஜன். தம்மை நீரிட்டு வளர்த்த வள்ளல் தம் பெருமையைக் கண்டு உவக்க வேண்டி அங்கே சற்று தாமதம். அவருக்கும் திருமாலை ஸ்ரீசடாரி பஹுமானங்கள் நிகழும். அங்கிருந்து நேராக கோபுர வாசலுக்கு எழுந்தருளுவர்.

கோபுர வாசலுக்கு வெளியே திரண்டு கிடக்கும் அடியார் கூட்டங்களைப்பற்றி எப்படிப் பேசுவது! பெருமாளுடைய பட்டாபிஷேகத்தை எதிர்பார்த்திருந்த அயோத்யாநகரவாஸிகளைக் குறித்து வால்மீகி பகவான் "ததா ஹ்யயோத்யா நிலய: ஸஸ்த்ரீ பாலாபலோ ஜந: । ராமாபிஷேக மாகாங்க்ஷந் நாகாங்க்ஷந்நுதயம் ரவே:" என்று வர்ணித்திருக்கும் கணக்கில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் புருஷர்கள், ஸ்திரீகள், வடது

முதிர்ந்தவர்கள், குழந்தைகள் அனைவரும் உதயத்தையும் அத்துடன் தங்களுக்குக்கிடைக்கப் போகும் எம்பெருமானது திவ்யதரிசனத்தையும் எதிர்பார்த்துக்கொண்டு காத்திருப்பார்கள். எங்கே குளித்தார்களோ, எப்போது குளித்தார்களோ சொல்லமுடியாது. அனைவரும் ஸ்நாநம் செய்து புண்ட்ரங்கள் தரித்து எழுந்தருளப்போகும் எம்பெருமானை ஸேவிக்க ஸித்தமாக 'எம்பெருமான் தன்னை என்னுகொலோ கண்குளிரக் காணும் நாளே' என்று ஆவலோடு மணிச்சணக்காக காத்திருப்பார்கள். இருள் நீங்கி வெளிச்சம் தோன்றும் ப்ரத்யூஷ காலம் வரவும் எம்பெருமான் கோபுரவாசலுக்கு எழுந்தருளப் போகிறார் என்று காட்டக்கூடியபல அடையாளங்கள் தோன்றும். திருச்சின்ன ஒலி, மேள, வாத்தியங்கள், மத்தாப்பின் ஒளி இவைகளாலே பெருமாள் ஸேவை உடனே கிடைக்கப்போகிறதென்று தெரிந்துகொண்ட ஜனங்களிடையே எற்படும் ஸம்பிரமத்தையும் குதூகலத்தையும் அவர்களுள் ஒருவராயிருந்து நேரில் கண்டாலொழிய அறிந்து கொள்ள முடியாது. முதல் முதல் விசால வெண் குடை தெரியும். பிறகு அதன் பரப்பின்கீழ் ஒரு கருமுகில் தாமரைச்காடு பூத்து ஓர் செம்பொற்குன்றின்மேல் வருவதுபோன்ற தேவாதிராஜன் திவ்யஸேவை கண்ணுக்கு விஷயமாகும். அவ்வளவுதான். அதுவரை அடியார்கள் உள்ளங்களில் அடங்கியிருந்த ஆவலும் பக்தியும் வெளிக்கிளம்பி ஒரே ஆரவாரமாகக் சாணும். 'ஜெயவிஜயீபவ!' என்போரும் 'பல்லாண்டு பல்லாண்டு' என்போரும் 'போற்றி போற்றி' என்போரும் நீடூழி வாழி என்போரும் தங்களன்பாரத் தமது சொல்வலத்தால் தலைச்சிறந்து பூசிக்கும் பேரொலி வானையும் திசைகளையும் நிரப்பிவிடும். அப்பொழுது சற்றே நின்று ஸேவை ஸாதித்தருளுவர் எம்பெருமான். அவனை ஸேவித்த அடியார்கள் படும்பாடு ஏகதேசமாகப் போகும்படி விளங்கும் அடியார்கள் கூட்டத்தைக் கண்ட அவ்வெம்பெருமான் திருமுகத்தின் புகர். அங்கே ஒரு கற்பூர ஹாரத்தி ஸமர்ப்பிப்பார்கள். மீண்டும் இரண்டடி எடுத்துவைத்து கோபுரத்தின் கீழ் எழுந்தருளி அங்கேயும் சற்று நின்று சாட்சியளிப்பது வழக்கம். (இதற்குத்தான் 'தொட்டையாசார் ஸேவை' என்று பெயர்.) அங்கேயும் ஒரு கற்பூர ஹாரத்தி. நாதஸ்வர வித்வான் அப்பொழுது 'வினதாஸூத' என்று இம் மஹோன்னதமான ஸேவையை அப்படியே கீர்த்தனரூபமாக சித்தரித்த ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் க்ருதியை அற்புதமாக வாசிப்பதைக் கேட்டு பக்தர்கள் உள்ளம் பரவசமாகிவிடும். அவ்வானந்தம் அநுபவைகவேத்யம் (அநுபவித்தே உணரற்பாலது); ஸ்ரீ வைகுண்டத்திலும் கிடைக்கக் கூடாத ப்ரஹ்மாநந்தம்.

அப்பொழுது தேவாதிராஜன் அளிக்கும் காட்சியே ஒரு தனிப்பெருமை பெற்றது. என்றும் இப்பிரபுவுக்கு அஸாதாரணமாயுள்ள வடிவழகோடும் அருளோடும் இன்று அளாதியான ஒரு அப்ராக்ருத தேஜஸ்ஸும் பரத்வமும் அருகிலிருப்போர்கண்ணையும் உள்ளத்தையும் தனிப்பட்ட முறையிலே ஈடுபடுத்துவன. இவர் ஆரோஹணித்திருக்கும் பெரிய திருவடியின் சாந்தியோ வர்ணிக்கைக்கு நிலமன்று. 'விண்ணோர்தொழக்கடவும் தழல்போல்சினத்த அப்புள்' என்றும் அசுரர் மங்கக் கடாவிய வேகப் பறவை' என்றும், 'காய்சினப்பறவை' யென்றும் நம்மாழ்வார் வர்ணித்தவெல்லாம் இவர் விஷயமேயாதல் வேண்டும், என்று அனைவரும் எண்ணும்படி அதிக ஸம்பிரமான தோற்றமும் உக்ரமான பார்வையும் பொருந்தி 'மண்கொண்ட வாமனன் ஏற மகிழ்ந்து செல் பண்கொண்ட புள்' என்றும், ஆழ்வாரும் 'த்வதங்க்ரி ஸம்மர்த்தக கிணாங்க சோபினா' என்று ஆளவந்தாரும் அநுபவித்த மகிழ்ச்சியும் சோபையும் தோன்ற அருளாளனது அருளாழிப்புள் அளிக்கும் அத்புத ஸேவை அடியார்கள் உள்ளத்தை விட்டு அகலவே அகலாது. 'மங்குயர் பொன்மலை மேலெழுந்த மாமுகில் போன்றுளர் வந்து காணீர்' என்று ஒருவருக்கொருவர் சொல்லி இன்புறும் வண்ணம் பெருமாளுக்கும் அவர் வாஹநத்துக்குமிருக்கும் சேர்த்தி உயர்ந்த ரஸாநுபவத்துக்கு விஷயமாகும். இச்சா

மோஹி மஹாபாஹும் ரகுவீரம் மஹாபலம்! கஜேந்த மஹாகாயா ந்தம் ராமம் சத்ரா வ்ருதாநநம்' என்று அயோத்யாவாஸிகள் அநுபவிக்க பாரித்தபடி, இங்கேயும் சத்ராவ்ருதாநநாக வே ஸேவை ஸாதிப்பர். பெருமாள் கோபுர வாசலுக்குள் எழுந்தருளும்போது ஒரு புறமாக குடை சாய்க்கப்படும். ராமாவதாரத்தில் அரசர்பெருமானாக அவதரித்தபடியால் யானை வாஹநம். இங்கே அமரர் பெருமானைத் தோன்றும்படியால் கருடவாஹநம்.

இந்தக் கோபுரவாசல் ஸேவையின் போது சில வருஷங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அவ்வமயம் அங்கிருந்து அநுபவித்து நின்ற ஒரு அன்பர் பெருமாளை ஸேவித்தார்! பின் திரும்பி ஜனஸமூஹத்தைப் பார்த்தார். ஒரே ஜனத்திரள். கண்ணுக்கெட்டியவரையில் தலைகளும் தலைகளின் மேல் குவிக்கப்பட்ட கைகளுமே தென்பட்டன. இமையா நாட்டத்தவர் இங்கேயும் உண்டு என்று எண்ணும்படி அனைவரும் கொட்டாத இருகண்களால் பெருமாளை ஸேவித்துக்கொண்டிருந்தனர். பார்த்தார் அன்பர். பெருமாளை நோக்கி, 'அப்பனே உன்னை இந்த எனது இரு கண்ணால் மட்டுமா ஸேவிப்பது? இவ்வழகையும் பெருமையையும் இங்கே திரண்டு நிற்கும் இத்தனை கோடிஜனங்களுடைய கண்களைக் கொண்டும் அவர்களது உள்ளங்களைக் கொண்டும் கண்டு அநுபவிக்க ஒரு சக்தியை அடியேனுக்கு நல்க மாட்டாயா? என்று கதறினர். அப்படிப் பிச்சேற்றும் தோற்றம் கோபுரவாசல் ஸேவை.

அதற்கு மேல் பெருமாள் எழுந்தருளி பதினாறு கால் மண்டபம் கடந்ததும் இரண்டு இன்னும் பெரிய குடைகளைச் சாற்றிக்கொள்வதும், அங்கிருந்து புறப்பட்டு ஜனஸாகரத்தின் மேல் மிதந்து செல்லும் கப்பல்போல் எழுந்தருளி தூப்புல் வேதாந்ததேசிகன் ஸந்நிதிக்கெதிரே நின்று இருகுடைகளையும் இறக்கித்தமது திருத்தோளிலிருந்து திருமாலையையும், ஸ்ரீசடாரியையும் ப்ரஸாதித்து தம்மை உள்ளபடியே கண்டு அநுபவித்து பல ஸ்தோத்ரங்கள் பாடிப்போந்த அவ் வாசார்யோத்தமரைக் குளிரக் கடாக்ஷித்தருளுவதும், மீண்டும் அங்கங்கே தேங்கி நிற்கும் பல்லாயிரம் ஜனங்களுக்குக் காட்சியளித்துக்கொண்டு ராஜ வீதி சேருவதும், கங்கைகொண்டான் மண்டபத்தில் இறங்கி சற்றே இளைப்பாறுவதும், மறுபடி திரும்புகாலில் துன்னு வெயில் வருத்த வாடின முகமும், வதங்கியமாலைகளுமாய் திருக்கோயில் சேருவதும் இவ்வழகிய உத்ஸவத்தின் மேல் பர்வங்கள். தொண்டர் எல்லீரும் வாரீர் தொழுதுதொழுது நின்றார்த்தும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

199523

செய்திகள்

ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம்

நங்கமங்கலம்

இந்த கிராமத்தில் முக்யஸ்தரான K. N. ஸ்ரீநிவாஸாசார்யர் ஷெகிராமத்தில் முன்பிருந்த கோயிலை ஜீர்ணோத்தாரணம் செய்து பெருமாள் தாயார் (மூலவ உத்ஸவபேரங்கள்) முதலானவர்களை எழுந்தருளப்பண்ணி வைத்தார். சித்திரைமீ 7உ மஹாஸம்ப்ரோக்ஷணத்தை ஸ்ரீ அழகியசிங்கரின் நியமநத்தின்பேரில் ஸ்ரீஸ்ரீகார்யம் ஸ்வாமி நேரில் எழுந்தருளி வேதபாராயண, திவ்யப்ரபந்த, க்ரந்தசதுஷ்டய, இதிஹாஸ புராணங்களுடன் வெகுவிமர்சையாக நடத்திவைத்தார். பிறகு ஸ்ரீகார்யம் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீமுகத்தை ஸேவித்து பலமந்த்ராக்ஷதையையும் நியமனப்படி அவர்களுக்குக் கொடுத்தார். அவ்வூர் ஸ்வாமிகளும் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியுடன் கலந்து கொண்டார்கள்.

இந்த ஸம்ப்ரோக்ஷணையை பூதேரி ஸங்

தானகோபாலாசார்யர் என்கிற மதுஸூதநபட்டரும், வேளியநல்லூர் தட்டை ஸுந்தராசார்யர் என்கிற நாராயண பட்டரும் நடத்திவைத்தார்கள். இவர்களால் பங்குனிமீ 27உ ஸ்ரீசடாரி ஸம்ப்ரோக்ஷணம் திருவள்ளூரில் ஸ்ரீஸந்நிதியில் பண்ணப்பட்டு நங்கமங்கலத்துக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோகப்பட்டது.

ஸ்ரீஸந்நிதி வழக்கப்படி சாத்துமுறை வாழித்திருநாமங்கள் நடத்தப்பட்டன. பிறகு ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இந்த கோவில் கட்ட ஆரம்பித்தமுதல் இதுவரையில் ஒவ்வொன்றுக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனம் பெற்றே செய்தேன்; அவ்விடத்திய அநுக்ரஹத்தால்தான் இவைகள் நிர்விக்நமாக நடந்தது என்று எல்லாஸ்வாமிகளின் முன்னிலையில் விஜ்ஞாபித்துக்கொண்டார். எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கு விசேஷ ததீயாராதனத்துடன் ஸம்பாவனையும் நன்ருகப் பண்ணினுர்.

அவரைப்போல் அவருடைய குடும்பத்தவர்களும் மிகவும் ஆஸ்திகர்களாக யிருந்தார்கள். அவர்களுக்கும் அந்த அக்ரஹார வாஸிகளுக்கும் ஸ்ரீலக்ஷ்மீநாராயணனுடைய அநுக்ரஹத்தால் ஸகலவிதமான க்ஷேமங்களும் உண்டாகவேண்டுமென்று பத்மாவதீ ஸமேத ஸ்ரீநிவாஸனை ப்ரார்த்திக்கிறேன்.

அழகியசெய்யூர், கல்யாணவரதன்,
வ்யாகரண சிரோமணி, வேதாந்தவித்யார்த்தி.

* * *

ஸ்ரீ அஹோபிலமடம் வேத, ப்ரபந்த, சாஸ்த்ர பாடசாலை, மதுராந்தகம்.

ஸ்ரீமதழகியசிங்கர்களின் நியமநத்தை சிரஸா வஹித்து ஷை மஹாகலாசாலையின் 9-வது வார்ஷிக மஹோத்ஸவம் சென்ற 5-4-1951 வியாழக்கிழமை பகல் 4-மணிக்கு மேல் ஷை கலாசாலையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

ஷை மஹோத்ஸவத்திற்காக ப்ரத்யேகமாக ஆஹ்வாநம் செய்யப்பட்டிருந்த ஸ்ரீ. உப. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ. உப. வித்வான் ஆசுகவி, வில்லூர் சிரோமணி, ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமியும் எதிர்பாராத காரணங்களினுல் எழுந்தருள முடியவில்லை.

ஸ்ரீமதழகியசிங்கர்களின் நியமநத்தையும் பலமந்த்ராக்ஷதையும் பெற்று பகல் 4 மணிக்கு ஷை உற்சவம் ஆரம்பிக்கப்பட்டது. ஷை சபைக்கு மதுராந்தகம் பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டு ஸ்ரீ. உப. ரங்காசார்யஸ்வாமி மிகவும் க்ருபையுடன் தலைமை வஹித்தார். ஷை ஊர் வித்வான் மாடபூசி ஸ்ரீ. உப. க்ருஷ்ணஸ்வாமிஐயங்கார்ஸ்வாமி ஸம்ஸ்க்ருதவித்யையின் அவச்யத்தைப்பற்றியும் வித்யார்த்திகளின் கடமையைப்பற்றியும் ரஸமானஉதாஹரணங்களுடன் உபந்யஸித்தார். அதுஸமயம் ஸ்ரீ. உப. இஞ்சிமேடு வித்வான் மாடபூசி வீரராகவாசார்ய ஸ்வாமி பகவத்குணாநுபவத்தைப்பற்றி விஸ்தாரமாகவும் ரஸவத்தாகவும் உபந்யஸித்தருளினுர்- கலாசாலையின் ஆண்டறிக்கை கௌரவாத்யக்ஷரால் ஸமர்ப்பிக்கப்பட்டது. அதேஸமயம் கலாசாலையிலுள்ள கல்யாணபிவர்திநீ ஸபையின் வார்ஷிகோத்ஸவமும் நடந்தது. ஸபையின் சார்பாக ஸ்ரீஅத்யக்ஷருக்கும் உபந்யாஸகர்களுக்கும் ஸ்வாகத பத்ரிகைகள் ஸமர்ப்பிவிக்கப்பட்டன.

உபந்யாஸங்கள் முடிந்த பிறகு ஸ்ரீமதழகியசிங்கர்களால் க்ருபையுடன் அநுக்ரஹிக்கப்பட்டுவருகிற பரிசுகள் தேர்வு பெற்ற வித்யார்த்திகளுக்கு வழங்கப்பட்டன. வழக்கம்போல மைலாப்பூர் ஸ்ரீ. உப. V. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் வழங்கப்படும் 'ஸ்ரீபாஷ்யம் வெள்ளிக்கொப்பைப்பரிசு' இவ்வருஷமும் வழங்கப்பட்டது.

உத்ஸவத்தின் அத்யக்ஷஸ்வாமி ஸ்ரீமதழகியசிங்கர்களின் உதாரகுணங்களைப்பற்றியும் கலாசாலையின் அபிவ்ருத்தியைப்பற்றியும் தெளிவாக கூறினுர்.

கலாசாலை கௌரவாத்யக்ஷர் ஸ்ரீமதழகியசிங்கர்களின் க்ருபைக்கு நன்றிகூறி உத்ஸவத்தை நன்கு நடத்தி உபகரித்த எல்லோருக்கும் வந்தனேபசாரம் கூறினுர்.

வேதகோஷத்துடன் சந்தன தாம்பூலம் முதலியவை எல்லோருக்கும் வழங்கப்பட்டு உத்ஸவம் வெகு விமர்சையாக முடிவு பெற்றது.

கல்யாணபுரம் ஈச்சம்பாடி,
தி. ராமஸ்வாமி ஐயங்கார்,
கௌரவாத்யக்ஷர், மதுராந்தகம்.

ஶ்ரீ:

[illegible]

ஆஸ்திக்யம்

[10-வது ஸம்புடம் 4 வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]।'

[அப்பொழுது துர்வாஸாவானவர் முத்கலனைப்பார்த்து அதிக ஸந்தோஷத்தை யடைந்தவராய் கொண்டாடினார். இந்த உலகத்தில் உன்னைப்போல துர்குணமில்லாமல் தாநம் செய்கிற மற்றொருவன் இல்லை; இல்லை. பசியானது மனிதனிடம் தர்மமென்கிற ஶப்தம் கூட இல்லாமல் பண்ணிவிடுகிறது. தைர்யத்தையும் போக்கிவிடுகிறது. நல்ல ரஸங்களை அநுபவிக்க ஆசைப்படுகிற நாக்கானது, ரஸங்கள் கிடைக்குமிடத்திற்கு மனிதனை இழுத்துக்கொண்டு போகிறது. ஆஹாரம் புஜித்தால் தான் ப்ராணன் ஸ்திரமாயிருக்கும். சஞ்சலஸ்வபாவமான மநஸ்ஸை அடக்குவது மிகவும் கஷ்டம். மனஸ்ஸையும், இந்த்ரியங்களையும் அடக்குவது தான் "தபஸ்" என்று பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. கஷ்டப்பட்டு ஸம்பாதித்த த்ரவ்யத்தை சுத்தமான மனத்தோடு கொடுப்பதானது மிகவும் துக்கத்தை உண்டாக்கும். இப்படிப்பட்ட நல்ல குணங்களெல்லாம் உன்னிடம் நிறைந்திருக்கின்றன. நான் உன்னுடைய குணங்களைக்கண்டு மிகவும் ஸந்தோஷிக்கிறேன். உன்னிடமிருந்து நல்லகுணங்களை நான் அடைந்ததினால் உன்னாலநுக்ரஹிக்கப்பெற்றேன். இந்த்ரியங்களை நன்றாக ஜயித்திருப்பது, தர்மவிஷயத்தில் நிலைபெற்றிருப்பது, தாநம் கொடுப்பது மனத்தை அடக்குவது, பொறுமையோடிருப்பது, தயை ஸத்யம், ஸ்வதர்மாநுஷ்டாநம் இவைமுதலான எல்லா நற்குணங்களும் உன்னிடம் நிலைபெற்றிருக்கின்றன. நீ செய்த புண்யங்களினால் அநேகம் புண்யலோகங்கள் உன்னால் ஜயிக்கப்பட்டிருக்கின்றன. நீ உயர்ந்த ஸ்வர்க்கத்தை இப்பொழுதே அடைந்துவிட்டாய். நீ செய்த பெரியதான தர்மமானது ஸ்வர்க்கலோகம் முழுதும் பரவி இருக்கிறது. நீ செய்த நல்ல வ்ரதங்களினால் இந்த சரீரத்தோடேயே ஸ்வர்க்கத்திற்குப்போகப் போகிறாய்' என்று சொன்னார்.]

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]'

[துர்வாஸரிஷி இப்படி சொல்லுகிற ஸமயத்திலேயே தேவதூதன் ஒருவன் இந்த்ரவிமாநத்தோடு வந்து ஓ முத்கலனே! இந்த ஹம்ஸ ஸாரஸ பக்ஷிகளால் இழுக்கப்பட்டதாயும் கிங்கிணிஜாலங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும், உயர்ந்தவாஸனையோடு கூடியதாயும், தன்னுடைய இஷ்டப்படி போவதாயுமுள்ள அழகாயுமிருக்கப்பட்ட விமானத்தை ஏறும் என்று சொன்னான். இது உன்னுடைய புண்ய கர்மங்களால் ஸம்பாதித்தது என்று சொல்ல, அந்த தேவதூதனைப்பார்த்து முத்கலன் கேட்கிறான்]

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]

'கே குணாஸ்தத்ர வஸதாம்
கிம் தபஸ்ச விநிஸ்சய: |
ஸ்வர்கே தத்ர ஸுகம் கிஞ்ச
தோஷோ வா தேவதூதக ||'

[உன்னால் ஸ்வர்க்கவாஸிகளுடைய குணங்களைக் கேட்கவேணுமென்று ஆசைப்படுகிறேன். அங்கு வஸிப்பவர்களுடைய மனோநிச்சயம் எப்படிப்பட்டது? அங்கு வஸிப்பவர்களுடைய வேலை எப்படிப்பட்டது? ஸுகம் என்ன மாதிரி? அங்கிருக்கும் தோஷம் என்ன? என்று தேவதூதனை முத்கலன் கேட்க]

'ஸதாம் ஸப்தபதம் மித்ரம்
ஆஹு: ஸந்த: குலோசிதா: |
மித்ரதாஞ்ச புரஸ்க்ருத்ய
ப்ருச்சாமி த்வாமஹம் விபோ ||
யதத்ர தத்யம் பத்யஞ்ச
தத் ப்ரவீஹ்யவிசாரயந் ||
ஸ்ருத்வா ததா கரிஷ்யாமி
வ்யவஸாயம் கிரா தவ |'

[பார்த்தமாத்திரத்திலேயே ஸாதுக்கள் மித்ரராவார்கள். அப்படிப்பட்ட மைத்ரீயானது உன்னிடம் இருப்பதால் அதை முன்னிட்டு உன்னைக் கேட்கிறேன். நீ அதிக கிருபையுள்ளவனகையால் அங்குள்ள உண்மையையும் ஹிதத்தையும் நீ சொல்லுவாயாகிலும். அதன் பிறகு நான் மனோநிச்சயம் பண்ணிக்கொண்டு விமானத்தை ஏறுகிறேன் என்ன, அப்போது தேவதூதன் ரிஷியைப்பார்த்துச் சொல்லுகிறான்]

'மஹர்ஷே(அ)கார்யபுத்திஸ்த்வம்
ய: ஸ்வர்க்கஸுகமுத்தமம் |
ஸம்ப்ராப்தம் பஹு மந்தவ்யம்
விம்ருஸஸ்யபுதோ யதா ||
உபரிஷ்டாதஸௌ லோகோ
யோ(அ)யம் ஸ்வரிதி ஸம்ஜ்ஞித: |
ஊர்த்வக: ஸத்பத: ஸஸ்வத்
தேவயாநசரோ முநே ||'

[ரிஷே! நீ மஹாபுத்திசாலி கிடைத்ததான மஹாவிமானத்தை ஏறாமல் அங்கு என்ன விசேஷங்கள் என்று கேட்கிறாய். கிடைத்த விமானத்தில் ஏறி மேலேஇருக்கும் ஸ்வர்லோகத்தில் ஸர்வகாலத்தில் விமானத்தோடு ஸஞ்சரிக்கவேண்டுவதாக இருக்க இம்மாதிரி கேள்வி கேட்பது உசிதமன்று. தெரியாதவன் போல் கேட்கிறாய்.]

'நாதப்ததபஸ: பும்ஸ:
நாமஹாயஜ்ஞயாஜிந: |
நாந்ருதா நாஸ்திகாஸ்சைவ
தத்ர கச்சந்தி முத்கல ||'

[ஸ்வர்கம் என்கிற லோகமானது மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய தபஸ்ஸென்ன, பஞ்சமஹாயஜ்ஞங்களென்ன, இப்படிப்பட்ட கஷ்டமான கர்மாக்களை செய்பவர்களாலேயே அடையக்கூடியது. பொய் சொல்லுகிறவர்கள் ஆஸ்திக்யமில்லாதவர்கள், இவர்களால் கிட்ட முடியாதது.]

'தர்மாத்மாநோ ஜிதாத்மாந:
ஸாந்தா தாந்தா விமத்ஸரா: |
தாநதர்மரதா நித்யம்
ஸூராஸ்சாஹவலக்ஷணா: ||
தத்ர கச்சந்தி தர்மாக்ர்யம்
க்ருத்வா ஸமதமாத்மகம் |
லோகாந் புண்யக்ருதாம் ப்ரஹ்மந்
ஸத்பிராஸேவிதாந் ந்ருபி: ||'

[மிகவும் மனஸ்ஸை அடக்கினவர்கள், அஸூயை இல்லாதவர்கள், எப்போதும் தானம் செய்கிறவர்கள், யுத்தத்தில் பின்வாங்காமலிருந்து ஜயித்தவர்கள், பஹிரிந்த்ரியம் அந்தரிந்த்ரியங்களை அடக்கினவர்கள், இம்மாதிரியான அதிகாரிகள் அந்த புண்யலோகத்தில் ஸஞ்சரிக்கிறார்கள் என்று சொல்லுகிறது.]

'தேவாஸ்ஸாத்யாஸ்ததா விஸ்வே
ததைவ ச மஹர்ஷய: |
யாமா தாமாஸ்ச மௌத்கல்ய
கந்தர்வாப்ஸரஸஸ்ததா ||
ஏஷாம் தேவநிகாயாநாம்
ப்ருதக் ப்ருதகநேகஸ: |
பாஸ்வந்த: காமஸம்பந்நா:
லோகாஸ்தேஜோமயா: ஸுபா: ||

த்ரயஸ்த்ரிம்ஶத்ஸஹஸ்ராணி
யோஜநாநி ஹிரண்மய: |
மேரு: பர்வதராஜோऽத்ர
தேவோத்யாநாநி முத்கல ||
நந்தநாதீநி புண்யாநி
விஹாரா: புண்யகர்மணாம் |
ந க்ஷுத்பிபாஸே ந க்லாநி:
ந ஶீதோஷ்ணபயம் ததா ||
பீபத்ஸமஶுபம் வாऽபி
தத்ர கிஞ்சிந்ந வித்யதே |
மநோஜ்ஞா: ஸர்வதோ கந்தா:
ஸுகஸ்பர்ஶாஶ்ச ஸர்வஶ: ||
ஶப்தா: ஶ்ருதிமநோக்ராஹ்யா:
ஸர்வதஸ்தத்ர வை முநே |
ந ஶோகோ ந ஜரா தத்ர
நாயாஸபரிதேவநே ||
ஈத்ருஶ: ஸ முநே லோக:
ஸ்வகர்மபலஹேதுக: |
ஸுக்ருதைஸ்தத்ர புருஷா:
ஸம்பவந்த்யாத்மகர்மபி: ||'

[அந்த ச்லோகத்தில் ஸாத்ய தேவர்கள் விச்வேதேவர்கள் மஹர்ஷிகள் கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுகள் இம்மாதிரி வெவ்வேறுருவங்கள் எடுத்துக்கொண்டு நினைத்ததெல்லாம் அநுபவித்துக்கொண்டு அதிக தேஜோவான்களாக அந்த தேஜோமய லோகங்களில் இருக்கிறார்கள். முப்பதினாயிரம் யோஜனை தூரத்தில் ஸ்வர்ணமயமாக மேருபர்வதம் இருக்கிறது. அங்கு அந்த தேவதைகளுக்கு உத்யானவனமிருக்கிறது. அப்படிப்பட்ட தேவர்கள் அந்த ஆராமத்தில் இஷ்டப்படி விளையாடுகிறார்கள். அங்கு இருப்பவர்களுக்கு பசியில்லை; தாஹமில்லை; ச்ரமமில்லை; குளிர், ஜ்வரம் முதலான பயமில்லை; ஜுகுப்ஸை என்கிறதில்லை; அசுபங்களில்லை; எங்கும் நல்ல வாஸனைகளும், நல்ல காத்துகளும், காதுக்கும், மனத்துக்கும் சப்தங்கள் எங்கும் ரம்யமாகவே யிருக்கிறது. சோகம், ஜரை, ச்ரமம், அழுகை முதலானதுகளில்லை. தன்னுடைய செய்வினையால் ஸம்பாதிக்கப்பட்ட லோகம் தன்னுடைய புண்ய கர்மங்களினால் அங்கு புருஷர்கள் இருக்கிறார்கள்.]

'தைஜஸாநி ஶரீராணி
பவந்த்யத்ரோபபத்யதாம் |
கர்மஜாந்யேவ மௌத்கல்ய
ந மாத்ருபித்ருஜாந்யுத ||
ந ஸம்ஸ்வேதோ ந தௌர்கந்த்யம்
புரீஷம் மூத்ரமேவ வா |
தேஷாம் ந ச ரஜோ வஸ்த்ரம்
பாததே தத்ர வை முநே ||
ந ம்லாயந்தி ஸ்ரஜஸ்தேஷாம்
திவ்யகந்தா மநோரமா: |
ஸம்யுஜ்யந்தே விமாநைஶ்ச
ப்ரஹ்மந்நேவம்விதைஶ்ச தே |

[அவர்களுடைய சரீரம் தைஜஸம். அந்த ப்ரகாசவத்தான சரீரமும் மாதா பிதாக்களுடைய சேர்க்கையன்றிக்கே ஸுக்ருத கர்மத்தால் கிடைத்தது. அவர்களுக்கு புழுக்கம் கிடையாது. துர்நாற்றங்கள் கிடையாது; மூத்ரபுரீஷங்கள் கிடையாது; அவர்களுடைய வஸ்த்ரங்கள் அழுக்காகிறதில்லை; அவர்களுடைய மாலைகள் வாடுகிறதில்லை; நல்ல வாஸனையுள்ளதாயும் மநத்துக்கு பிடித்ததாயுமிருக்கிறது. இப்படிப்பட்ட போகோபகரணங்களோடுகூடின விமானங்களோடு ஸஞ்சரிக்கிறார்கள்.]

ஈர்ஷ்யாஶோகக்லமாபேதா
மோஹமாத்ஸர்யவர்ஜிதா: |
ஸுகம் ஸ்வர்கஜிதஸ்தத்ர
வர்தயந்தே மஹாமுநே ||
தேஷாம் ததாவிதாநாம் து
லோகாநாம் முநிபுங்கவ |
உபர்யுபரி ஶக்ரஸ்ய
லோகா திவ்யகுணாந்விதா: ||
புரஸ்தாத் ப்ரஹ்மணஸ்தத்ர
லோகாஸ்தேஜோமயா: ஶுபா: |
யத்ர யாந்த்ய்ருஷயோ ப்ரஹ்மந்
பூதா: ஸ்வை: கர்மபி: ஶுபை: ||'

[ஹே ரிஷே! அந்த ஸ்வர்கத்தில் வஸிப்பவ

(157-ம் பக்கம் பார்க்க.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

இப்போது பள்ளிக்கூடங்களுக்கும் கலாசாலைகளுக்கும் விராமகாலம். நமது சிறுவர்கள் பொழுதை வீணில் கழிக்காமல் நல்ல விஷயங்களைப்பற்றிச் சிறிது கற்றுக்கொள்ள அவகாச மேற்பட்டிருக்கிறது. சிறுவர்களும் அவர்களின் பெற்றோர்களும் அக்கரையெடுத்துக்கொண்டால் இந்த விராமகாலத்தைப் பலவழிகளில் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

விராமகாலம்

சக்தியுள்ளவர்கள் தங்கள் ஆசார்யன் ஸந்நிதிக்குச் சென்று 'மஹாத்மபிர்மாமவலோகயதாம் நய' என்ற ரீதியில் ஆசார்ய கடாக்ஷத்திற்குத் தன்னையும் தங்கள் புத்ராதிகளையும் இலக்காகச் செய்துகொள்ளலாம். இம்மாதிரியான ஆசார்யகடாக்ஷத்தின் மதிப்பை ஒருவராலும் அளவிட முடியாது. ஸுக்ருத விசேஷமிருக்குமாகில் ஒரு க்ஷணகால மேற்பட்ட ஆசார்ய கடாக்ஷமே ஒருவனை நிச்ரேயஸஸாதனமான வ்யாபாரத்தில் சீக்கிரத்தில் ஈடுபடச்செய்து அவனுக்குப் பலவித நன்மைகளை உண்டாக்கும். 'ஏகேநைவ குரோர் த்ருஷ்ட்யா ஸாஹாய்யாதேவி லப்யதே । ந தத் த்ர்யக்ஷாஷ்டாக்ஷஸஹஸ்ராக்ஷணாவி க்ஷமம் விசு ।' [குருவின் ஒரு கண் பார்வையால் கிடைக்கக்கூடிய நன்மை முக்கண்களின் பார்வையாலும் எட்டு கண்களின் பார்வையாலும் ஆயிரங்கண்களின் பார்வையாலும் (அதாவது ருத்ரன், ப்ரஹ்மா, இந்த்ரன் இவர்களின் பார்வையாலும்) கிடைக்காது.] என்று ஸ்வாமி தேசிகன் ஆசார்யகடாக்ஷத்தின் பெருமையை அழகாக வர்ணிக்கிறார். உபநயநமாகாத சிறுவர்களுக்கும் யதாகாலத்தில் உபநயநம் செய்வித்து ஆசார்யன் ஸந்நிதிக்கு அழைத்துச் சென்று ஸமாச்ரயணம் செய்வித்து ஸ்ரீவைஷ்ணவத்வ பூர்த்தியை உண்டாக்கலாம்.

தங்களுக்கு ஸமீபத்திலுள்ளவர்களாயும் ஜ்ஞாநாநுஷ்டாந சீலர்களாயுமுள்ள ஸாதுக்களிடம் தங்கள் சிறுவர்களை அனுப்பி நல்ல விஷயங்களைக் கற்கச் செய்யலாம். இக் கலிகாலத்திலும் அப்படிப்பட்ட மஹான்கள் சிலர் அங்சங்கே இருந்துகொண்டுதானிருக்கிறார்கள். அத்தகையவர்கள் கிடைக்கவேண்டுமென்ற ச்ரத்தையுடன் தேடினல் நிச்சயமாய் கிடைப்பார்கள். அவர்களிடம் சிறுவர்களை அடிக்கடி அனுப்பிவைக்க வேண்டும். சிறுவர்களை மறந்துபோன ஸந்த்யாவந்தநாதிகளை மறுபடி அப்யஸிக்கச்செய்து அநுஷ்டிக்கச் செய்யவேண்டும். அத்யந்தோபயுக்தமான வேத, ப்ரபந்த பாகங்கள், பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் இவைகளைப் பயிலச் செய்ய வேண்டும். நாம் ச்ரத்தையுடனும் பக்தியுடனும் நமது குழந்தைகளை அனுப்பிவைத்தால் அப்பெரியோர்கள் அன்புடன் அனைத்தையும் கற்பிக்க முன்வருவர்களென்பது திண்ணம்.

ஆங்காங்கு நிர்துஷ்டமாயுள்ள பகவத்ஸந்நிதிகளுக்கு அடிக்கடி சிறுவர்களை அழைத்துச் சென்று எம்பெருமானை ஸேவிக்கச் செய்ய வேண்டும். அவ்வெம்பெருமான்கள் கண்டருளும் மஹோத்ஸவங்களில் கலந்துகொண்டு பகவதநுபவத்தில் குழந்தைகளுக்கு ருசியை

உண்டாக்கவேண்டும். சாஸ்த்ரமுகமாகப் பிறக்கும் பகவத்விஷய ருசியை விட இந்த ரீதியில் பிறக்கும் பகவத்விஷய ருசி நீடித்து ஸ்திரமாக நிற்கக் கூடியது.

நம் ஸித்தாந்தத்தின் சிறந்த அம்சங்களும் நம் ஸம்ப்ரதாயத்தின் உண்மைகளும் தங்கள் சிறுவர்களின் உள்ளத்தில் நன்கு பதிந்து அவர்கள் மேன்மையை அடையவேண்டுமென்று விரும்பும் ஆஸ்திகர்களான பெற்றோர்கள் நாம் மேலே சொல்லியுள்ள கார்யங்களில் ச்ரத்தையுடன் ப்ரவிருத்தித்து தங்கள் குழந்தைகளின் ஹிதத்தைத் தேடவேண்டுமென வேண்டுகிறோம்.

(155-ம் பக்கம் தொடர்ச்சி.)

களுக்கு சோகம், ச்ரமம், அஜ்ஞானம், அஸூயை இவைகள் கிடையாது. இதுமாதிரி மேல் மேலும் லோகங்கள் இருக்கின்றன. இம்மாதிரி ப்ரஹ்மலோகம் வரையில் உத்க்ருஷ்டமான லோகங்கள் இருக்கின்றன. உயர்ந்த புண்ணியங்களைப்பண்ணின ரிஷிகள் அந்த லோகங்களில் வஸிக்கிறார்கள்.]

ருபவோ நாம தத்ராந்யே
தேவாநாமபி தேவதா: ।
தேஷாம் லோகாந்தரே
யாந் யஜந்தீஹ தேவதா: ॥
ஸ்வயம்ப்ரபாஸ்தே பாஸ்வந்தோ
லோகா: காமதுகா: பரே ।
ந தேஷாம் ஸ்த்ரீக்ருதஸ்தாப:
ந லோகைச்வர்யமத்ஸர: ॥
ந வர்த்தயந்த்யாஹுதிபி:
தே சாப்யம்ருதபோஜநா: ।
ததா திவ்யசரீராஸ்தே
ந ச விக்ரஹமூர்த்தய: ॥
ந ஸுகே ஸுககாமாஶ்ச
தேவதேவா: ஸநாதநா: ।
ந கல்பபரிவர்த்தேஷு
பரிவர்த்தந்தி தே ததா ॥

[இந்தலோகத்தில் எந்த தேவதைகளை யஜிக்கிறார்களோ அவர்களுடைய லோகத்திற்கும் மேல் ரிபுக்கள் என்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவர்களுக்கும் தேவர்கள். அவர்கள் லோகங்கள் இஷ்டங்களைக் கொடுக்கக்கூடியதுகள். அவர்களுக்கு ஸ்த்ரீநிமித்தமான க்லேசங்களும் லோகத்தில் உள்ள மாத்ஸர்யம் முதலிய குணங்களும் கிடையாது. அவர்கள் யாரையும் பூஜிக்கிறதில்லை. ஆனால் அம்ருதபோஜனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய சரீரம் திவ்யம். அவர்கள் ஸுகங்களில் ஆசைப்படுவதில்லை. ஸநாதனர்களாயும் தேவர்களுக்கும் தேவர்களாயிருக்கும் அவர்கள் கல்பாதி ப்ரளயங்களில் மாறுதலை அடைவதில்லை.]

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

முன் வருஷங்களின் ஸஞ்சிகைகள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் சென்ற ஸம்புடங்களின் ஸஞ்சிகைகளில் கீழ் குறிக்கப்பட்ட ஸஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் அவைகள் தவிர மற்ற ஸஞ்சிகைகள் ஸவல்ப ப்ரதிகளே கைவசமிருக்கின்றன. அபேக்ஷையுள்ளவர்கள் உடனேயே எழுதித் தருவித்துக்கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். ஒரு ஸஞ்சிகையின் விலை அணு 4.

கைவசமில்லாத ஸஞ்சிகைகளின் விவரம்.

ஸம்புடம்	1	4	7	8	9
ஸஞ்சிகை நெ.	3	5, 6, 7.	11, 12.	1	2

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர ௵ ஆனி ௴ 1951 ஜூன் - ஜூலை ௴

[உத்தராயணம் க்ரீஷ்ம ருது- மிதுனம் ௴]

15—6—51	1உ	வெள்ளிக்கிழமை	...	மிதுன ரவி 2-8- சூன்யதிதி.
16—6—51	2உ	சனிக்கிழமை	...	சூன்யதிதி ஸ்ரீவைஷ்ண ஏகாதசி.
17—6—51	3உ	ஞாயிற்றுக்கிழமை	...	மிதுனசுக்லத்ரயோதசி திதி
21—6—51	7உ	வியாழக்கிழமை	...	த்விதீயை த்ருதீயை திதித்வயம்
30—6—51	16உ	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
3—7—51	19உ	செவ்வாய்க்கிழமை	...	அமாதிதி. ஸர்வ அமாவாஸ்யை
4—7—51	20உ	புதன்கிழமை	...	அதிதி
13—7—51	29உ	வெள்ளிக்கிழமை	...	நவமி தசமி திதித்வயம் ஸ்வாதி பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்
14—7—51	30உ	சனிக்கிழமை	...	மிதுனசுக்ல ஏகாதசிதிதி
15—7—51	31உ	ஞாயிற்றுக்கிழமை	...	மிதுனசுக்லத்வாதசிதிதி -ஸர்வ ஏகாதசி - அனுஷம் ஸ்ரீநாதமுனிகள் திருநக்ஷத்ரம்
16—7—51	32உ	திங்கட்கிழமை	...	சூன்யதிதி கடக ரவி 38–46 (இன்று ஸங்க்ரமண தர்பணம்)

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு: 1951 ஸு எப்ரல் மீ

சந்தா எண்		பெயரும் விலாஸமும்	வருஷம்	ரூ.
45	ஸ்ரீ	S. ரங்காசாரியர், பவநகர்.	51	3
50	,,	S. ராமஸ்வாமி, பம்பாய்.	50–51	6
99	,,	R. ஸந்தானம் ஐயங்கார், தி. நகர்.	51	3
137	,,	P. S. கோவிந்த ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3
214	,,	S. ஸ்ரீநிவாஸகோபால ஐயங்கார், வடசருக்கை.	52	3
224	,,	T. N. வானமாமலை ஐயங்கார், ராஜபாளையம்.	51	3
290	,,	T. A. ராஜகோபால ஐயங்கார், திருப்பத்தூர்.	51	3
393	,,	திவான்பஹதூர் S. ராகவ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3
443	,,	P. S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3
448	,,	S. ஆள்வார் ஐயங்கார், திருநெல்வேலி	51	3
464	,,	A. வெங்கடாசாரியர், ஓரிஸா.	51	3
755	,,	G. K. ராமஸ்வாமி ஐயங்கார், புது டெல்லி.	51	3
779	,,	K. R. ஸௌம்யநாராயணன், கும்பகோணம்.	51	3
796	,,	D. P. தாதாசாரியர், கள்ளக்குறிச்சி.	51	3
869	,,	S. நரஸிம்ஹாசாரியர், பம்பாய்.	51	¾
959	,,	S. வீரராகவன், மேலவிடயல்.	51	3
983	,,	K. வீரராகவாசாரியர், மைலாப்பூர்.	51	3
984	,,	R. ராஜகோபால ஐயங்கார், வேலூர், சேலம்,	51	3
1016	,,	K. S. சேஷாத்திரி ஐயங்கார், திப்பரமாதேவி.	51	3
1032	,,	A, R. லக்ஷ்மீநரஸிம்ஹஐயங்கார், தஞ்சாவூர்.	51	3
1040	,,	K. கஸ்தூரிரங்க ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3
1041	,,	K. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3
1051	,,	K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், அம்பத்தூர்.	51	3
1088	,,	V. R. ராஜகோபால ஐயங்கார், மைலாப்பூர்.	51	2½
1089	,,	S. ரங்காச்சாரி ஸ்ரீரங்கம்.	51	3
1095	,,	செக்ரடரி, தையார் கோவாபரேடிவ் ஸொஸைடி.	51	6
1097	,,	T. A. தாதாசாரியர். கள்ளக்குறிச்சி.	51	3
1098	,,	K. கிருஷ்ணமாசாரியர், அளத்துறை.	51	3
1099	ஸ்ரீமதி	கோமளத்தம்மாள், கும்பகோணம்.	51	3
1100	ஸ்ரீ	T. ஸுந்தராசாரியார், திருவள்ளூர்,	51	3
1101	,,	K. ஸ்ரீநிவாஸாசாரியர், ஹைதராபாத்.	51	3
		*சந்தா எண் தெரியாதது.		3
		ஆக மொத்தம் ரூ.		99¼

* இந்த சந்தாதாரர் உடனே மணியார்டர் ரசீதை எமக்கு அனுப்பி சந்தா நம்பரை யும் தெரிவிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

Regd-No.M.4437

ஸ்ரீ அஹோபில மடம்

ஸம்ஸ்க்ருத கலாசாலை,

மதுராந்தகம்.

இக்கலாசாலையில் சென்னை யூனிவர்ஸிடியாரால் நடத்தப்படும் ந்யாய வ்யாகரண சிரோமணிப் பரீக்ஷைகளுக்கு வித்யார்த்திகளுக்கு பாடப்ரவசனம் செய்யப்படுகிறது. சென்னை சர்க்காரால் நடத்தப்படும் பிரவேசப் (Entrance) பரீக்ஷையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களே சிரோமணி 1-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சிரோமணி பரீக்ஷைப் பாடங்கள் 4-வருஷங்களில் போதிக்கப் படுகின்றன. இரண்டாவது வருஷ முடிவில் வித்யார்த்திகள் பூர்வாங்கப் (பிரெலிமினரி) பரீக்ஷைக்கு அனுப்பப்படுவார்கள். 4-வது வருஷமுடிவில் கடைசி [பைனல்] பரீக்ஷைக்கு அனுப்பப்படுவார்கள்.

சென்னை சர்க்கார் நடத்தும் பிரவேசப் பரீக்ஷைக்கும் வித்யார்த்திகளுக்குப் பாடப்ரவசனம் செய்யப்படுகிறது. ஷி வகுப்பிலும் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளிலும் வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

யஜுர்வேதம், திவ்யப்ரபந்தம் இவைகளைத் தனித்தனியே அத்யயனம் செய்விக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இக்கலாசாலையில் எல்லா வித்யார்த்திகளுக்கும் கணிதம் தமிழ் முதலிய பொது அறிவுப்பாடங்களும் போதிக்கப்படும்.

வித்யார்த்திகளுக்கு போஜனாதி ஸௌகர்யங்களும் இலவசமாகச் செய்துகொடுக்கப்படும்.

கலாசாலையில் சேரவிரும்பும் மாணவர்கள் [1] தங்கள் பெயர், [2] பிறந்த தேதி & வயது, [3] தகப்பனார் பெயர், [4] தற்போதுள்ள யோக்யதாம்சம், [5] ஏற்கனவே தேறிய பரீக்ஷை விவரங்கள், [6 சேரவிரும்பும் வகுப்பு முதலியவைகளையும் தங்கள் முழுவிலாஸத்தையும் விவரமாக எழுதி **10—6-1951**-க்குள் கலாசாலை ப்ரின்ஸ்பாலுக்கு மனுச்செய்து கொள்ளவேண்டும். நற்சாக்ஷி பத்திரங்கள் அல்லது சர்டிபிகேட்டுகள் ஏதாவது இருந்தால் அவைகளையோ அல்லது அவைகளின் ஸரியான நகலையோ மனுவுடன் அனுப்பவேண்டும். சேரவிரும்பும் வித்யார்த்திகள் நேரே ஆஜராகி வாக்குப் பரீக்ஷை கொடுக்கவும் தயாராயிருக்கவேண்டும். கலாசாலையில் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் கலாசாலாதிகாரிகளின் தீர்ப்பே முடிவானது. மற்ற விவரங்களுக்குக் கலாசாலை ப்ரின்ஸிபாலுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மனு அனுப்பவேண்டிய விலாஸம்—

பிரின்ஸ்பால்,

ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.

Printed by Sri J. Rangachariar, Srikaryam, Sri AhobilaMutt, at Sri Malola press, 30, Panagal Street, Tiruvellore
Edited & Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Adiappa Mudali street, Purasawalkam, vepery, Madras. 7.